மல்கியா 4:2
யோவான் 17:17
நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 114* ஆகஸ்ட் *2025*

## யாக்கோபு, லாபான், ராகேல் மற்றும் லேயாள் - அடையாளம் மற்றும் நிஜ நிறைவேறுதல்

***ஆதி. 29:1-30***

***PT# 458, Mar-Apr 1962, pp. 21,22***



*1.* இந்த வேத பகுதியில் நாம் பின்வரும் நிகழ்வுகளைப் பற்றிய பதிவைக் காண்கிறோம்: *(1)* பெத்தேலிலிருந்து ஆரான் வரை யாக்கோபு செய்த பிரயாணம், *(2)* அங்கே அவர் ராகேலையும் லாபானையும் சந்திப்பது, *(3)* ராகேல் மீது யாக்கோபுக்கு இருந்த ஆழமான அன்பு மற்றும் அவளை மணம் செய்து கொள்வதற்காக யாக்கோபு செய்த ஏழு வருட ஒப்பந்தம், *(4)* லாபான் முதலில் லேயாளை (வஞ்சகமாக) யாக்-கோபுக்கு மனைவியாகக் கொடுப்பது, *(5)* அதற்குப்பிறகு ராகேலை யாக்கோபுக்கு மனைவியாகக் கொடுப்பது.

*2.* ஆதி. *29:1* <u>யாக்கோபு பிரயாணம்பண்ணி, கீழ்த்திசையாரின் (கிழக்கு திசையாரின்) தேசத்தில் போய்ச் சேர்ந்தான்.</u> நிஜ நிறைவேறுதலில் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள், குறிப்பாக யோவான் அப்போஸ்தலர், யூத மத அமைப்பின் செயல் எல்லையை விட்டு வந்த பிறகும், யூத யுக அறுவடையின் முடிவில் இழந்ததைத் திரும்பக் கொடுத்தலைப் பற்றிய சத்தியத்தின் அற்புதமான தெளிவைப் பெற்றுக் கொண்ட பிறகும் (யாக்கோபு கண்ட ஏணியின் சொப்பனம் இதை அடை - யாளப்படுத்துகிறது). தொடர்ந்து முன்னேறி சபையின் சிமிர்னா கால கட்டத்தின் ஆரம்பத்தில் தேவனுடைய பெயரளவிலான சுவிசேஷ யுக ஜனங்களின் செயல் எல்லைக்குள் வந்தார்கள். இது இரு அறுவடைகளுக்கு இடைப்பட்ட காலமாக இருந்தது (யாக்கோபு...கீழ்த் திசையாரின் தேசத்தில் போய்ச் சேர்ந்தான்).

*3.* ஆதி. *29:2,3* <u>அங்கே வயல்வெளியிலே ஒரு கிணற்றையும், அதின் அருகே மடக்கியிருக்கிற மூன்று ஆட்டுமந்தைகளையும் கண்டான்; அந்தக் கிணற்றிலே மந்தைகளுக்குத் தண்ணீர் காட்டுவார்கள்; அந்தக் கிணற்றின் வாய் ஒரு பெரிய கல்லினால் அடைக்கப் பட்டிருந்தது. அவ்விடத்தில் மந்தைகள் எல்லாம் சேர்ந்தபின் கிணற்றின் வாயிலிருக்கும் கல்லை மேய்ப்பர் புரட்டி, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, மறுபடியும் கல்லை முன்னிருந்தபடி கிணற்றின் வாயில் வைப்பார் கள்.</u> சபையின் சிமிர்னா கால கட்டத்தில், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் பெரிய வாத விவாதத்தின் மத்தியில், தேவனுடைய சுவிசேஷ யுக ஜனங்களின் மூன்று வகுப்புகள் இருப்பதை உணர்ந்தார்கள் (மூன்று ஆட்டு மந்தைகள்). இந்த மூன்று வகுப்பார்களும் சத்தியத் -தைப் பற்றிய அவர்களுடைய புரிந்துகொள்ளுதலில் குறைவு உள்ளவர்களாக இருந்தார்கள்: *(1)* சிலர் யெஷுஆவின் மனுஷீக நிலைக்கு முன்பு இருந்த நிலையில் அவருடைய அலுவல் சம்பந்தமாகவும், *(2)* சிலர் அவருடைய மனுஷீக நிலையில் அவருடைய அலுவல் சம்பந்தமாகவும், *(3)* சிலர் அவருடைய மனுஷீக நிலைக் குப் பின்னிருக்கிற இருத்தலில் அவருடைய அலுவல்

## தூது நிரல்

*1.* யாக்கோபு, லாபான், ராகேல் மற்றும் லேயாள்.........................................................*1*
*2.* யாவே தேவனே நம்முடைய மறைவிடம்.....*6*
*3.* கிறிஸ்தவ குணாம்சத்தை நிறைவாக்கும் பண்புகள்...................................................*9*
*4.* பூமியைக் கவிழ்ப்பது....................................*14*

சம்பந்தமாகவும் சத்தியத்தின் புரிந்து கொள்ளுதலில் குறைவுப்பட்டிருந்தார்கள் *(E Vol. 8, pp. 226, 227, 700, 701)*. இந்த மூன்று வகுப்பார்களும் அவர்களுக்குப் புத்துணர்ச்சியையும் ஜீவனையும் அளிக்கும் சத்தியத்தின் ஊற்றாகிய தேவ வார்த்தையின் அருகே இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள் (ஒரு கிணற்றையும், அதன் அருகே மடக்கியிருக்கிற மூன்று ஆட்டு மந்தைகள்). இருந்தாலும் அவர்களுக்குத் தேவையாயிருந்த தேவ வார்த்தையின் சத்தியத்தின் சில அம்சங்கள் கொடுக்கப்படுவதற்கு ஏற்ற காலம் வராததால், அவைகள் இன்னும் மூடி வைக்கப்பட்டிருந்தன (அந்த கிணற்றின் வாய்...அடைக்கப்பட்டிருந்தது). தேவன் அவருடைய ஊழியக்காரர்களின் மூலம் அவ்வப்போது அவர்களுக்குச் சத்தியத்தைக் கொடுக்கும் போது, அவர்கள் அதை உடனடியாகப் பெற்றுக் கொள்ளும்படிக்குத், தேவ வார்த்தையின் அண்டையில் கூடி இருந்தார்கள் (அவ்விடத்தில் மந்தைகளெல்லாம் சேர்ந்து).

*4. ஆதி. 29:4-6* யாக்கோபு அவர்களைப் பார்த்து: சகோதரரே, நீங்கள் எவ்விடத்தார் என்றான்; அவர்கள், நாங்கள் ஆரான் ஊரார் என்றார்கள். அப்பொழுது அவன்: நாகோரின் குமாரனாகிய லாபானை அறிவீர்களா என்று கேட்டான்; அறிவோம் என்றார்கள். அவன் சுகமாயிருக்கிறானா என்று விசாரித்தான்; அதற்கு அவர்கள்: சுகமாயிருக்கிறான்; அவன் குமாரத்தியாகிய ராகேல், அதோ, ஆடுகளை ஓட்டிக் கொண்டு வருகிறாள் என்று சொன்னார்கள். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு), அவர்களுடைய மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம், இந்த மூன்று வகுப்புகளின் மேய்ப்பர்களாக இருந்த சில கீழ்நிலை பெயர் சபை தலைவர்களிடம் பின்வரும் மூன்று காரியங்களைக் குறித்து விசாரித்தார்கள்: *(a)* இந்த தலைவர்களின் நிலை (நீங்கள் எவ்விடத்தார்), *(b)* அவர்கள் தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் முக்கியமான தலைவர்களை அங்கீகரிக்கிறீர்களா இல்லையா (லாபனை அறிவீர்களா) - பொதுவாக சொன்னால் முக்கியமான தலைவர்கள் குருமார் கொள்கை மற்றும் வாத விவாதங்களைச் செய்யும் இயல்பை சார்ந்தவர்களாக இருந்தார்கள் (நாகோரின் குமாரன் -நாகோர் – *snorting* - வெறுப்பு காண்பிக்கும் வகையில் சீற்றொலி உண்டாக்குவது), *(c)* இந்த முக்கியமான தலைவர்கள் ஆவிக்குரிய ரீதியில் ஆரோக்கியமாகவும் செழிப்பாகவும் இருந்தார்களா இல்லையா (அவன் சுகமாக இருக்கிறானா).

*5.(a)* என்ற கேள்விக்கு, அவர்கள் நியாயமாக்கப்பட்ட விசுவாசிகளாக இருந்தார்கள் (ஆரான் ஊரார்) என்று அந்த கீழ்நிலை தலைவர்கள் பதிலளித்தார்கள். *(b)* மற்றும் *(c)* என்ற கேள்விகளுக்கு “ஆம்” என்று பதிலளித்தார்கள். இதற்குக் கூடுதலாக *(c)* என்ற கேள்விக்கு இவ்வாறாகவும் பதிலளித்தார்கள்: தேவனுடைய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாரை அபிவிருத்தி செய்யும் (விசேஷமாகச் சுவிசேஷ யுகத்தின் முடிவில்) ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலில் சத்தியங்கள் மற்றும் அவைகளைப் பிரயோகிப்பவர்களும் கூட (ராகேல்) புத்துணர்ச்சி அளிக்கும் கூடுதலான சத்தியத்தை நாடி அவ்விடத்திற்கு வந்து கொண்டிருந்தார்கள் (இதோ ஆடுகளை ஓட்டிக்கொண்டு வருகிறாள்). இவர்கள் பெயர் சபையின் முக்கியமான தலைவர்களின் கண்காணிப்பின் கீழ் அபிவிருத்தியடைந்திருந்தார்கள் (லாபானின் குமாரத்தி). மேலும் அந்த முக்கியமான தலைவர்களை ஆதரிப்பவர்களை மேய்க்கும் பொறுப்பு அவளுக்கு இருந்தது (தன் தகப்பனுடைய ஆடுகள்; *ஆதி. 29:9* ம் வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்).

*6. ஆதி. 29:7* அப்பொழுது அவன்: இன்னும் வெகு பொழுதிருக்கிறதே; இது மந்தைகளைச் சேர்க்கிற வேளை அல்லவே, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, இன்னும் மேயவிடலாம் என்றான். சிமிர்னா காலகட்டத்திற்குச் சற்று முன்பு நிகழ்ந்த எருசலேமின் அழிவு மற்றும் அதனோடு தொடர்புடைய மற்ற சம்பவங்கள், *லூக். 21:20-24* வரையுள்ள வசனங்களின் நிறைவேறுதல்களாக, சிமிர்னா சபை சகோதரர்கள் சரியாகக் கண்டு கொண்டார்கள். இது நம்முடைய கர்த்தர் கொடுத்த பெரிய தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதியாக இருந்தது. ஆனால் இந்த நிகழ்வுகள் இந்த தீர்க்கதரிசனத்தின் மற்ற அம்சங்களும், அப்பொழுதே நிறைவேற்றப்படுவதை அர்த்தப்படுத்தும், என்று தவறாக எண்ணினார்கள். ஆகையால் கர்த்தருடைய இரண்டாம் வருகை, மீதியுள்ள சிறுமந்தை அங்கத்தினர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவது ஆகியவைகளும் அப்போதே விரைவாக நிறைவேற்றப்படும் என்று தவறாக எண்ணினார்கள் (இவைகள் உண்மையில் சுவிசேஷ யுகத்தின் முடிவுக்குரியவைகள்).

*7.* ஆனால் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) இந்த காரியங்களைச் சரியாகப் புரிந்து கொண்டார்கள். யெஷுஆவின் இரண்டாம் வருகை மற்றும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் கூட்டிச் சேர்த்தல் ஆகியவைகள் *(மத். 24:31)*, அப்போது உடனடியாக நிறைவேறப்போவதில்லை என்று உணர்ந்தார்கள். ஆகையால் சுவிசேஷ யுகம் முடிவதற்கு முன்பு இன்னும் நீண்ட காலம் செல்ல வேண்டுமென்று (இன்னும் வெகுபொழுது இருக்கிறதே) இந்த விசேஷித்த ஊழியக்காரர்கள் அந்த மூன்று வகுப்புகளின் தலைவர்களிடம் தெரிவித்தார்கள். சுவிசேஷ யுகத்தின் முடிவில் தான் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் (இது மந்தைகளைச் சேர்க்கிற வேலையல்லவே). ஆகையால் அதற்கிடையில் அவர்கள் தங்களால் பெற்றுக் கொள்ளக் கூடிய சத்தியம், கிருபை மற்றும் ஆவிக்குரிய புத்துணர்ச்சியின் அம்சங்களை அவர்களுடைய பொறுப்பிலுள்ள தேவனுடைய ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் அவர்களிடம் சொன்னார் (ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, இன்னும் மேய விடலாம்).

*8. ஆதி. 29:8,9* அதற்கு அவர்கள்: எல்லா மந்தைகளும் சேருமுன்னே அப்படிச் செய்யக்கூடாது; சேர்ந்தபின் கிணற்றின் வாயிலுள்ள கல்லைப் புரட்டுவார்கள்; அப்பொழுது ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுவோம் என்றார்கள். அவர்களோடே அவன் பேசிக்கொண்டிருக்கும்போதே, தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ராகேல் அந்த ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தாள். அதற்குப் பதிலாக இந்த மூன்று வகுப்புகளின் தலைவர்கள் பின்வரும் காரியத்தைத் தெரிவித்தார்கள்: அக்காலத்திலிருந்த சூழ்நிலைகளில் அவ்வாறு செய்யக் கூடாததாக இருந்தது (அப்படி செய்யக் கூடாது). ஏனென்றால் தேவனுடைய ஜனங்கள் பொதுவாகக் கூடி வந்து, சில கருத்துகள் சம்பந்தமாகத் தேவ வார்த்தையின் போதனைகளைக் குறித்து விசாரித்து (எல்லா மந்தைகளும் சேர்ந்த பின்), அதற்குப்பிறகு சத்தியத்தின் கூடுதலான அம்சங்கள் வெளிப்படுத்தப்பட்டு, தேவனுடைய ஊழியக்காரர்களின் மூலம் கொடுக்கப்படும் வரை (கிணற்றின் வாயிலுள்ள கல்லைப் புரட்டுவார்கள்) காத்திருப்பது அவர்களுடைய பழக்கமாக இருந்தது. அவ்வாறு செய்த பிறகு தான், தேவனுடைய ஜனங்கள்

அவர்களை மேய்ப்பவர்களின் மூலம் சத்தியத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடும் *(அப்போது ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுவோம்)*. அவர்கள் இந்த காரியத்தைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களும், அவைகளைப் பிரயோகிப்பவர்களும் விசேஷமாக அவர்களுடைய கவனத்திற்கு வந்தார்கள் *(அவர்களோடே அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே... ராகேல்... வந்தாள்)*. அவர்களோடு பெயர் சபையின் முக்கியமான தலைவர்களை ஆதரிப்பவர்களும் இருந்தார்கள். அவர்கள் அவர்களுக்கு மேய்ப்பர்களாக இருந்தார்கள் *(தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ராகேல் அந்த ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தாள்)*.

## யாக்கோபு மற்றும் ராகேலின் சந்திப்பு

*9. ஆதி. 29:10* <u>யாக்கோபு தன் தாயின் சகோதரனான லாபானுடைய குமாரத்தியாகிய ராகேலையும், தன் தாயின் சகோதரனாகிய லாபானின் ஆடுகளையும் கண்டபோது, யாக்கோபு போய், கிணற்றின் வாயிலிருந்த கல்லைப் புரட்டி, தன் தாயின் சகோதரனாகிய லாபானின் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான்.</u> தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் *(யாக்கோபு)*, விசேஷமாக யோவான் அப்போஸ்தலர்: *(1)*தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் முக்கியமான தலைவர்களின் மேற்பார்வையின் கீழ் அபிவிருத்தியடைந்த, ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட சத்தியங்களையும் அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் கண்டுகொண்டார்கள் *(யாக்கோபு... லாபானுடைய குமாரத்தியாகிய ராகேலை... கண்டு)*, *(2)* ஆவிக்குரிய ரீதியில் அவைகளோடு தங்களுக்கு நெருங்கிய பந்தம் இருப்பதை உணர்ந்தார்கள் *(தன் தாயின் சகோதரனின் குமாரத்தி)*, *(3)*அந்த முக்கியமான தலைவர்களின் ஆதரவாளர்களையும் கவனித்தார்கள் *(லாபானின் ஆடுகளையும் கண்டு)*, *(4)*அக்காலத்தில் தேவனுடைய ஜனங்களின் மத்தியில் நடந்து கொண்டிருந்த பெரிய வாத விவாதத்தின் மத்தியில், இந்த ஆதரவாளர்களுக்கும், ஆதி.29:2-ம் வசனத்தில் சொல்லப்பட்ட மூன்று வகுப்பார்களுக்கும், கிறிஸ்துவின் மனுஷீக நிலைக்கு முன்னிருக்கிற நிலை, மனுஷீக நிலை, மனுஷீக நிலைக்குப் பின்னிருக்கிற நிலை ஆகியவற்றில் அவருடைய அலுவல்கள் சம்பந்தமாகக் கூடுதலான சத்தியம் தேவையாயிருப்பதையும் உணர்ந்தார்கள். அப்போது தேவனுடைய இந்த விசேஷித்த ஊழியக்காரர்கள், விசேஷமாக யோவான் அப்போஸ்தலர், இந்த முக்கியமான தலைவர்களின் ஆதரவாளர்களுக்காக, இந்த காரியங்கள் சம்பந்தப்பட்ட கூடுதலான சத்தியங்களை வெளிப்படுத்தினார்கள் *[யோவான் சுவிசேஷத்தையும், அவர் எழுதின நிருபங்களையும் பார்க்கவும் - E. Vol 8, p. 226 (கிணற்றின் வாயிலிருந்த கல்லை புரட்டி... தண்ணீர் காட்டினான்)]*.

*10. ஆதி. 29:11,12* <u>பின்பு யாக்கோபு ராகேலை முத்தஞ்செய்து, சத்தமிட்டு அழுது, தான் அவள் தகப்பனுடைய மருமகனென்றும், ரெபெக்காளின் குமாரனென்றும் ராகேலுக்கு அறிவித்தான். அவள் ஓடிப்போய்த் தன் தகப்பனுக்கு அறிவித்தாள்.</u> இந்த ஊழியக்காரர்கள் *(யாக்கோபு)* இந்த ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களிடமும் அவைகளைப் பிரயோகிப்பவர்களிடமும் *(ராகேல்)*விசேஷமான அன்பு நிறைந்த மதித்துணருதலையும் பற்றையும் வெளிப்படுத்தினார்கள் *(ராகேலை முத்தஞ் செய்து)*. மேலும் தேவனுக்கு மிகுந்த நன்றியறிதலை ஆழ்ந்த உணர்ச்சியோடு வெளிப்படுத்தினார்கள் *(சத்தமிட்டு அழுது – KJV lifted up his voice – குரலை உயர்த்தி)*. அவர்களோடு அவர்களுக்கிருக்கிற நெருங்கிய ஆவிக்குரிய பந்தத்தை அறிக்கை பண்ணினார்கள் *(ராகேலுக்கு அறிவித்தான்)*. இந்த சத்தியங்களைப் பிரயோகிப்பவர்கள் விரைவாகச் செயல்பட்டு, தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் முக்கிய தலைவர்களுக்கு அதைத் தெரிவித்தார்கள் *(அவள் ஓடிப்போய்த் தன் தகப்பனுக்கு அறிவித்தாள்)*.

*11. ஆதி. 29:13,14* <u>லாபான் தன் சகோதரியின் குமாரனாகிய யாக்கோபுடைய செய்தியைக் கேட்டபோது, அவனுக்கு எதிர்கொண்டோடி, அவனைக் கட்டிக் கொண்டு முத்தஞ்செய்து, தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோனான்; அவன் தன் காரியங்களையெல்லாம் விவரமாய் லாபானுக்குச் சொன்னான். அப்பொழுது லாபான்: நீ என் எலும்பும் என் மாம்சமுமானவன் என்றான். ஒரு மாதம்வரைக்கும் யாக்கோபு அவனிடத்தில் தங்கினான்.</u> இந்த முக்கியமான தலைவர்கள் *(லாபான்)* அதை அறிந்து கொள்ளும் போது, விரைவாகவும், இருதய பூர்வமான மதித்துணருதல் மற்றும் பற்றுதல்களின் வெளிப்பாடுகளுடனும் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களை *(யாக்கோபு)*தங்களுடைய செயல் எல்லைக்குள் வரவேற்றார்கள் *(லாபான்...யாக்கோபை.... கட்டிக்கொண்டு முத்தஞ் செய்து, தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனான்)*. தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களும் அவர்களுடைய அனுபவங்களைக் குறித்து *(அவர்களைத் துன்புறுத்துகிற யூத மத அமைப்பை விட்டு ஓடி வந்தது முதலியவைகள்)* அவர்களுக்குத் தெரிவித்தார்கள் *(தன் காரியங்களை எல்லாம் விவரமாய் லாபானுக்குச் சொன்னான்)*. இந்த முக்கியமான தலைவர்களுக்குத் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களுக்கிருக்கிற ஆவிக்குரிய பந்தத்தை இருதய பூர்வமாக ஏற்றுக் கொண்டதை வெளிப்படுத்தினார்கள் *(நீ என் எலும்பும் என் மாம்சமுமானவன்)*. ஆகையால் தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் அவர்களோடே தங்கி தற்காலிகமாக அவர்களுக்கு ஊழியஞ் செய்தார்கள் *(ஒரு மாதம் வரைக்கும் யாக்கோபு அவனிடம் தங்கினான்)*.

*12. ஆதி. 29:15* <u>பின்பு லாபான் யாக்கோபை நோக்கி: நீ என் மருமகனாயிருப்பதினால், சும்மா எனக்கு வேலைசெய்யலாமா? சம்பளம் எவ்வளவு கேட்கிறாய், சொல் என்றான்.</u> தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் தலைவர்கள் *(லாபான்)*அதிகமாகவோ குறைவாகவோ சுயநலமானவர்களாகவும் குருமார் கொள்கை பற்றுடையவர்களாகவும் இருந்தார்கள். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் *(யாக்கோபு)*தேவனுடைய ஜனங்களின் சிறந்த மேய்ப்பர்களாக இருப்பதைக் கண்டார்கள். ஆகையால் அவர்களுடைய சுயநல நோக்கங்களை அடைவதற்கு அவர்கள் தங்களுக்கு உதவ கூடுமென்று எண்ணினார்கள். அவர்களுக்கிடையிலுள்ள பரஸ்பர ஆவிக்குரிய பந்தத்தை உணர்ந்து, தங்களுடைய சுயநலத்தை, நீதி மற்றும் கனிவான அக்கறை என்ற தோற்றத்தின் கீழ் மறைத்து, இவ்வாறு கூறினார்கள். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் *(யாக்கோபு)* பெயர் சபையின் தலைவர்களின் *(லாபான்)*செயல் எல்லையில், அவர்களிடமிருந்து எவ்வித விசேஷித்த அனுகூலங்களையும் பெற்றுக் கொள்ளாமல் ஊழியஞ் செய்வது நியாயமானதல்லவென்று சொன்னார்கள் *(சும்மா எனக்கு வேலை செய்யலாமா)*. ஆகையால் இந்த ஊழியக்காரர்கள் செய்யும் ஊழியங்களுக்கு கைம்மாறாக எதைப் பெற விரும்புகிறார்கள் என்று கேட்டார்கள்

*(சம்பளம் எவ்வளவு கேட்கிறாய், சொல்).*

*13. ஆதி. 29:16,17* <u>லாபானுக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள்; மூத்தவள் பேர் லேயாள், இளையவள் பேர் ராகேல். லேயாளுடைய கண்கள் கூச்சப் பார்வையாயிருந்தது; ராகேலோ ரூபவதியும் பார்வைக்கு அழகானவளுமாயிருந்தாள்.</u> தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் முக்கியமான தலைவர்களிடம் (லாபான்) இரு விதமான சத்திய தொகுப்புகளும், அவைகளைப் பிரயோகிப்பவர்களும் இருந்தார்கள். (இந்த சத்தியங்களைப் பிரயோகிப்பவர்கள் பெயர் சபையின் முக்கியமான தலைவர்களின் தலைமையின் கீழ் அபிவிருத்தி அடைந்திருப்பதால், அதிகமாகவோ குறைவாகவோ அவர்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருந்தார்கள் (இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள்). அந்த இரு தொகுப்புகளாவன: (1) அதிகமாகவோ குறைவாகவோ தப்பறைகள் கலந்த சத்தியங்கள் மற்றும் அவைகளைப் பிரயோகிப்பவர்கள் (லேயாள், *languid* - பெலவீனமான) - அவைகளின் மூலம் தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் மத்தியில் சுவிசேஷ யுக மதப்பிரிவுகள் அபிவிருத்தி செய்யப்பட்டன, மற்றும் (2) ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்கள் மற்றும் அவைகளைப் பிரயோகிப்பவர்கள் (ராகேல், பெண் ஆட்டுக் குட்டி) - இவைகளின் மூலம் தேவனுடைய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார், விசேஷமாகச் சுவிசேஷ யுகம் முடிவில், அபிவிருத்தி அடைந்தார்கள். நிஜ நிறைவேறுதலான லேயாள் அதிகமாகவோ குறைவாகவோ ஆவிக்குரிய பார்வையில் குறைவுப்பட்டிருந்தாள் (கண்கள் கூச்சப்பார்வையாயிருந்தது – *weak eyed – Roth* – பெலவீனமான பார்வை). ஆனால் நிஜ நிறைவேறுதலான ராகேலோ சத்தியம் மற்றும் அதின் ஆவியின் அழகுகளில் மிகவும் நேர்த்தியானவளாக இருந்தாள் [ரூபவதியும் பார்வைக்கு அழகானவளுமாய் இருந்தாள் (ஆதி. 39:6-ம் வசனத்தில் அவளுடைய குமாரனாகிய யோசேப்பைக் குறித்தும் இதே எபிரெய வார்த்தை உபயோகிக்கப்படுகிறது)].

*14. ஆதி. 29:18,19* <u>யாக்கோபு ராகேல்பேரில் பிரியப்பட்டு: உம்முடைய இளைய குமாரத்தியாகிய ராகேலுக்காக உம்மிடத்தில் ஏழு வருஷம் வேலை செய்கிறேன் என்றான். அதற்கு லாபான்: நான் அவளை அந்நிய புருஷனுக்குக் கொடுக்கிறதைப்பார்க்கிலும், அவளை உனக்குக் கொடுக்கிறது உத்தமம், என்னிடத்தில் தரித்திரு என்றான்.</u> நிச்சயமாகத், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) நிஜ நிறைவேறுதலான ராகேலிடம் விசேஷமான அன்பு நிறைந்த மதித்துணருதலும் பற்றுதலும் உடையவர்களாயிருந்தார்கள் (யாக்கோபு ராகேல் பேரில் பிரியப்பட்டு). மேலும் தேவனுடைய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களின் மத்தியில் மிகுந்த கனிதரும் ஒரு இயக்கத்தை உருவாக்குவதற்காக, நிஜ நிறைவேறுதலான ராகேலோடு இணைவதற்காக முழு நிறைவான ஊழியத்தைச் செய்ய முன் வந்தார்கள் (ஏழு வருஷம் வேலை செய்கிறேன்). தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் முக்கியமான தலைவர்கள்(லாபான்) அவர்களுடைய மனநிலை வார்த்தை மற்றும் செயலின் மூலம் பின்வரும் காரியத்தைத் தெரிவித்தார்கள்: நிஜ நிறைவேறுதலான ராகேல் மற்றவர்களோடு இணைவதை விட (அவளை அந்நிய புருஷனுக்குக் கொடுப்பதைப் பார்க்கிலும்) தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களோடு இணைந்திருப்பது நலமானதாகும். (அவளை உனக்குக் கொடுக்கிறது உத்தமம்). மேலும் அந்த தலைவர்களும் (லாபான்) அவர்களுடைய ஆதரவாளர்களும், தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களின் (யாக்கோபு) ஊழியத்தினால் பல வழிகளில் அதிக நன்மையைப் பெற்றிருப்பதால், அந்த ஊழியக்காரர்கள் அவர்களோடு தங்கி ஊழியஞ் செய்வதில் அந்த தலைவர்கள் மகிழ்ந்தார்கள் (என்னிடத்தில் தரித்திரு).

## லேயாளுடனும் ராகேலுடனும் யாக்கோபின் திருமணம்

*15. ஆதி. 29:20* <u>அந்தப்படியே யாக்கோபு ராகேலுக்காக ஏழு வருஷம் வேலை செய்தான்; அவள் பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் அவனுக்குக் கொஞ்சநாளாகத் தோன்றினது.</u> தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) அவர்களுடைய ஊழியத்தினால் ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்கள் மற்றும் அவைகளைப் பிரயோகிப்பவர்களுடன் (ராகேல்) இணைந்து கொள்வதற்காகத் தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் முக்கியமான தலைவர்களுக்கு (லாபான்)முழு நிறைவாக ஊழியஞ் செய்தார்கள் (யாக்கோபு ராகேலுக்காக ஏழு வருஷம் வேலை செய்தான்). மேலும் இந்த சத்தியங்களையும், அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் (ராகேல்) அவர்கள் பெரிதும் மதித்துணர்ந்து நேசித்ததினால், அன்பின் இந்த பிரயாசத்தில் அவர்கள் கழித்த இந்த நேரத்தை மிகவும் குறுகியதென்று எண்ணினார்கள் (பிரியத்தினாலே…கொஞ்ச நாளாகத் தோன்றினது).

*16. ஆதி. 29:21,22* <u>பின்பு யாக்கோபு லாபானை நோக்கி: என் நாட்கள் நிறைவேறினபடியால், என் மனைவியிடத்தில் நான் சேரும்படி அவளை எனக்குத் தரவேண்டும் என்றான். அப்பொழுது லாபான் அவ்விடத்து மனிதர் எல்லாரையும் கூடிவரச்செய்து விருந்து பண்ணினான்.</u> அதற்குப்பிறகு,, அவர்கள் வாக்களித்திருந்த முழு நிறைவான ஊழியத்தைச் செய்திருந்ததால், தேவனுடைய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் கனிதரும் ஒரு இயக்கத்தை அபிவிருத்தி செய்வதற்காக, அவர்கள் (யாக்கோபு) இந்த சத்தியங்களுடனும் அவைகளைப் பிரயோகிப்பவர்களுடனும் (ராகேல்) இணைந்து கொள்வதற்கு அந்த முக்கியமான தலைவர்கள் (லாபான்) உடனடியாக ஒத்துக் கொள்ள வேண்டுமென்று தங்கள் மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் அவர்களை நோக்கி பார்த்தார்கள் (லாபானை நோக்கி … அவளை எனக்குத் தர வேண்டும்). அதற்கு பிரதிகிரியையாக இந்த முக்கியமான தலைவர்கள் (லாபான்), தேவனுடைய பெயரளவிலான ஜனங்களைக் கூட்டிச் சேர்த்து, அவர்களின் மத்தியில் பிரபலமாயிருந்த சத்தியங்களின் ஒரு விருந்தை அவர்களுக்காக ஆயத்தம் செய்தார்கள் (அவ்விடத்து மனிதர் எல்லாரையும் கூடிவரச் செய்து விருந்து பண்ணினான்).

*17. ஆதி. 29:23,24* <u>அன்று இரவிலே அவன் தன் குமாரத்தியாகிய லேயாளை அழைத்துக்கொண்டுபோய், அவனிடத்தில் விட்டான்; அவளை அவன் சேர்ந்தான். லாபான் தன் வேலைக்காரியாகிய சில்பாளைத் தன் குமாரத்தியாகிய லேயாளுக்கு வேலைக்காரியாகக் கொடுத்தான்.</u> அதற்குப்பிறகு அவர்கள் (லாபான்) தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்களிடம் (யாக்கோபு) அவர்களுக்குரிய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்கள் மற்றும் அவைகளைப் பிரயோகிப்பவர்களைக் (ராகேல்) கொண்டு வருவதற்குப்

*பதிலாக அவர்களை வஞ்சித்து, தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் மத்தியில் சுவிசேஷ யுக மதப் பிரிவுகளை அபிவிருத்தி செய்யும் அதிகமாகவோ குறைவாகவோ தப்பறை கலந்த சத்தியங்களையும் அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் அவர்களிடத்திற்கு கொண்டு வந்தார்கள் (லேயாளை… அவனிடத்தில் விட்டான்). தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் தேவனுடைய ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் ஒரு கனி தரும் இயக்கத்தை உண்டு பண்ண முயன்று, அவைகளோடு இணைந்து கொண்டார்கள் (அவளை அவன் சேர்ந்தான்). இந்த முக்கியமான தலைவர்கள் (லாபான்) நிஜ நிறைவேறுதலான லேயாளுடனே கூட அவைகளோடு தொடர்புடைய கீழ்நிலை சத்தியங்களையும், அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் (சில்பாள், கீழே விழுகிற) விசேஷித்த உதவியாளர்களையும் (வேலைக்காரியாக) கொடுத்தார்கள்.*

*18. ஆதி. 29:25 காலையிலே, இதோ, அவள் லேயாள் என்று யாக்கோபு கண்டு, லாபானை நோக்கி: ஏன் எனக்கு இப்படிச் செய்தீர்? ராகேலுக்காக அல்லவா உம்மிடத்தில் வேலைசெய்தேன்; பின்னை ஏன் எனக்கு வஞ்சகம்பண்ணினீர் என்றான். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு)அந்த சத்தியங்களுடனும் அவைகளைப் பிரயோகிப்பவர்களுடனும் (லேயாள்) கொஞ்சங் காலத்திற்கு இணைந்திருந்த பிறகு, அந்த விஷயத்தைப் பற்றி மேலும் வெளிச்சத்தைப் பெற்றுக் கொண்ட போது (காலையிலே) அவர்கள் வஞ்சிக்கப்பட்டதை உணர்ந்தார்கள். அதாவது மதப்பிரிவுகளை அபிவிருத்தி செய்யும் நோக்கங்களுக்கு ஊழியஞ் செய்யும்படி இந்த தப்பறை கலந்த சத்தியங்களுடனும் அவைகளைப் பிரயோகிப்பவர்களுடனும் வஞ்சனையினால் இணைக்கப்பட்டதை உணர்ந்தார்கள். ஆகையால் மனநிலை, வார்த்தை மற்றும் செயலின் மூலம் அந்த முக்கியமான தலைவர்களைக் (லாபான்) கண்டித்து, அவர்கள் தங்களிடம் அவ்வாறு செயல்படுவதற்குக் காரணமென்னவென்று கேட்டார்கள் (ஏன் எனக்கு இப்படிச் செய்தீர்?). ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் வாக்குத்தத்தங்களுடனும் அவைகளைப் பிரயோகிப்பவர்களுடனும் (ராகேல்) இணைந்து கொள்வதற்காக அவர்கள் முழு நிறைவான ஊழியத்தைச் செய்திருந்தார்கள் அல்லவா? (ராகேலுக்காக அல்லவா …. வேலை செய்தேன்). அப்படி இருக்கும்போது இந்த தலைவர்கள் அவர்களை வஞ்சிப்பதற்குக் காரணமென்ன? (ஏன் எனக்கு வஞ்சகம் பண்ணினீர்).*

*19. ஆதி. 29:26 அதற்கு லாபான்: மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது இவ்விடத்து வழக்கம் அல்ல. இந்த முக்கியமான தலைவர்களின் (லாபான்) செயல் எல்லையில், சுயத்தை பாதுகாத்துக் கொள்வதற்காகவும், சுயநல நோக்கங்கள் பிரதானமாக நிறைவேற்றப்படுவதற்காகவும் அவ்வாறு செய்வது வழக்கமானதாகவும் அவசியமானதாகவும் இருப்பதால் அவர்கள் இவ்வாறு வஞ்சகம் பண்ணினதாகக் காரணம் கூறினார்கள் (இவ்விடத்து வழக்கமல்ல). உண்மையாகவே இந்நாள் வரையிலும் கூட தேவனுடைய பெயரளவிலான ஜனங்களில் குருமார் கொள்கையை ஆதரிக்கிற முக்கியமான தலைவர்களின் மனநிலை அவ்வாறாகவே இருக்கிறது! தேவ வார்த்தையின் அடிப்படையில் கட்டப்பட்ட சபையின் ஐக்கியத்திற்குப் பதிலாகச், சட்ட ரீதியான கோரிக்கைகளின் மூலமும் மதப்பிரிவுகளின் கூட்டமைப்பின் மூலமும் அவர்களுடைய மதப்பிரிவுகளின் விருப்பங்களையும் இலக்குகளையும் நிலை நாட்ட அவர்கள் செய்யும் முயற்சிகளில் இதை நாம் காண்கிறோம்.*

*20. ஆதி. 29:27-29 இவளுடைய ஏழு நாளை நிறைவேற்று; அவளையும் உனக்குத் தருவேன்; அவளுக்காகவும் நீ இன்னும் ஏழு வருஷம் என்னிடத்தில் வேலைசெய் என்றான். அந்தப்படியே யாக்கோபு, இவளுடைய ஏழு நாளை நிறைவேற்றினான். அப்பொழுது தன் குமாரத்தியாகிய ராகேலையும் அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான். மேலும் லாபான் தன் வேலைக்காரியாகிய பில்காளைத் தன் குமாரத்தியாகிய ராகேலுக்கு வேலைக்காரியாகக் கொடுத்தான். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) லேயாளால் அடையாளப்படுத்தப்படுகிற சத்தியங்களுடனும் அவைகளைப் பிரயோகிப்பவர்களுடனும் தொடர்ந்து இணைந்திருக்க வேண்டும் என்றும் அந்த பந்தத்தை முறிக்கக் கூடாது என்றும் முக்கியமான தலைவர்கள் (லாபான்) வற்புறுத்தினார்கள். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களுக்காகவும், அவைகளைப் பிரயோகிப்பவர்களுக்காகவும் (ராகேல்) மேலும் முழுமையான ஊழியத்தைச் செலுத்தினால், அவைகளுடனும் தங்களை இணைத்துக் கொள்ளக் கூடுமென்று அந்த தலைவர்கள் வாக்களித்தார்கள் (அவளையும் …தருவேன் … நீ இன்னும் ஏழு வருஷம் வேலை செய்). இந்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) அதை ஏற்றுக் கொண்டார்கள். ஆகையால் நிஜ நிறைவேறுதலான லேயாளுடன் பந்தத்தை முறிக்காதிருந்தார்கள். பெயர் சபையின் முக்கியமான தலைவர்களும் (லாபான்) இந்த ஊழியக்காரர்கள் ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களோடு இணைவதை ஏற்றுக் கொண்டார்கள் (ராகேலையும் அவளுக்கு மனைவியாகக் கொடுத்தான்). மேலும் அவைகளோடு தொடர்புடைய, கீழ்நிலை சத்தியங்களையும் அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் (பில்காள், பயந்த சுபாவமுடைய) அவர்களுக்கு விசேஷித்த உதவியாளர்களாகக் (வேலைக்காரியாக) கொடுத்தார்கள்.*

*21. அடையாளத்தில் லேயாளின் ஏழு நாள் நிறைவேற்றப்படுவதென்பது யாக்கோபு செய்த கூடுதலான ஏழு வருட ஊழியத்தை அர்த்தப்படுத்தாது. மாறாக அது கலியாண விருந்தின் ஏழு நாட்களை அர்த்தப்படுத்தும். அக்காலத்தில் பொதுவாக அந்த விருந்து ஏழு நாட்களுக்கு நீடித்தது (நியா. 14:12-ம் வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்). அவ்விடத்து மனிதர் எல்லாரும் (ஆதி.29:22) அழைக்கப்பட்டிருந்த அந்த கலியாணத்தின் சடங்குகளும் கொண்டாட்டங்களும் திடீரென்று நிறுத்தப்பட்டிருந்தால், அது லாபானையும் லேயாளையும் சங்கடப்படுத்தியிருக்கும். ஆகையால் லேயாளுக்காக, விருந்தின் ஏழு நாட்களை யாக்கோபு நிறைவேற்றின பிறகு, ராகேலை அவனுக்கு மனைவியாகக் கொடுக்க லாபான் வாக்குக் கொடுத்தான். ஆனால் அதற்காக யாக்கோபு இன்னும் ஏழு வருடங்கள் ஊழியஞ் செய்ய வேண்டும். சூழ்நிலைகளின் கட்டாயத்தினால் யாக்கோபு அதை ஏற்றுக் கொண்டான். யாக்கோபு மற்றும் லேயாளின் கலியாண விருந்தின் ஏழு நாட்களுக்குப் பிறகு லாபான் அவனுக்கு ராகேலையும் கொடுத்தான்.*

*22. ஆதி. 29:30 யாக்கோபு ராகேலையும் சேர்ந்தான்; லேயாளைப்பார்க்கிலும் ராகேலை அவன் அதிகமாய் நேசித்து, பின்னும் ஏழு வருஷம் அவனிடத்தில் சேவித்தான். இப்பொழுது நாம் திரும்ப நிஜ நிறைவேறுதலுக்கு வருவோம். தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) இறுதியாகத் தேவனுடைய*

உண்மையான ஜனங்களின் ஒரு கனி தரும் ஊழியத்தை உருவாக்க முயன்று, ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப் படுதலின் சத்தியங்களுடனும் அவைகளைப் பிரயோகிப் பவர்களுடனும் (ராகேல்) இணைந்து கொண்டார்கள். தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் மத்தியில் மதப்பிரிவுகளை அபிவிருத்தி செய்யும் அதிகமாகவோ குறைவாகவோ தப்பறை கலந்த சத்தியங்களையும் அவை களைப் பிரயோகிப்பவர்களையும் (லேயாள்) தேவ னுடைய விசேஷித்த ஊழியக்காரர்கள் (யாக்கோபு) மதித் துணர்ந்து நேசித்ததை விட, ஆவிக்குரிய தெரிந்து கொள்ளப்படுதலின் சத்தியங்களையும் அவைகளைப் பிரயோகிப்பவர்களையும் (ராகேல்) இன்னும் ஆழமாக மதித்துணர்ந்து நேசித்தார்கள் (லேயாளைப் பார்க்கிலும் ராகேலை அதிகமாக நேசித்து). நிஜ நிறைவேறுதலான ராகேலுடன் இணைந்து கொண்டதற்காக அவர்கள் அந்த முக்கியமான தலைவர்களுக்கு (லாபான்)முழு நிறைவாக ஊழியஞ் செய்தார்கள். (பின்னும் ஏழு வருஷம் சேவித்தான்). தேவனுடைய உண்மையான ஊழியக் காரர்கள் அனைவருக்கும் அவர் இந்தப் பாடத்தை ஆசீர்வதித்துக் கொடுப்பாராக!



★★★★★★★★★★★★★★★★★★★★★

# யாவே தேவனே நம்முடைய மறைவிடம்

***PT# 379, July 1950, pp. 98,99***

*"என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள்"*
*(ஏசா. 26: 20)*

1. **ந**ம்முடைய பரமபிதா தம்முடைய ஜனங் களின் மேல் வைக்கிற, மாபெரும் அன்பையும், அவர் களைக் குறித்து அவர் கொள்கிற விசேஷித்த அக்கறை யையும் உணர நமக்கு உதவும் படிக்கு, அவர் பாசம் நிறைந்த கனிவுள்ளவராக இருக்கிறார். அவருடைய தீர்க்கதரிசியின் மூலம், சுவிசேஷ யுகத்தின் முடிவு காலத்தின் கண்ணோட்டத்திலிருந்து, அவர் ஒரு மகா உபத்திரவ காலத்தைக் குறித்து நமக்கு முன்னெச்சரித்தார் (ஏசா. 26: 5, 6, 21). இது "யாதொரு ஜாதியாரும் தோன்றி னது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்து காலமாக" இருக்கிறது (தானி. 12:1). இந்த காலத்தில் தற்போதைய காரியங்களின் அரசாங்க, சமுதாய மற்றும் மத ரீதியான அமைப்பு முழுவதும் சங்காரம் என்னும் துடைப்பத்தினால் பெருக்கிவிடப்படும் (ஏசா. 14:23). இருந்தாலும் தீர்க்கதரிசி சொல்வதை போல இந்த காரியங்களெல்லாவற்றின் மத்தியிலும் கூட அவருடைய ஜனங்களுக்கு அவருக்குள் இளைப்பாறுதலோடும் சமாதானத்தோடும் இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார் (ஏசா. 26:3,4). மேலும் கர்த்தர் மற்ற தீர்க்க தரிசிகளின் மூலம் விசுவாச உறுதி மற்றும் தைரியத்தின் அழகான வார்த்தைகளை நம்முடைய வாயிலே கொடுக் கிறார் (சங். 46; 103: 13).

2. உலகத்தில் இப்பொழுது நிகழ்ந்து கொண்டி ருக்கிற மகா உபத்திரவத்தின் மத்தியில், நம்முடைய பரம பிதா நமக்களிக்கிற ஆறுதல், உற்சாகம், பாதுகாப்பு ஆகிய வற்றின் மூலம், அவருடைய ஜனங்களாகிய நம்மிடத்தில், அவர் வைக்கிற இந்த விசேஷித்த அன்பையும் அக்கறை யையும், நாம் மிகுந்த நன்றியறிதலுடன் மதித்துணரும் அதே நேரத்தில், இந்த காரியத்தைச் சுயத்தில் திருப்தி கொண்டு அக்கரையில்லாமல், முழு உலகத்தின் மேல் அவர் கொண்டிருக்கிற மாபெரும் அன்பை மறந்த வர்களாகவும் இருந்தால், முற்றிலும் அவருடைய ஆவி இல்லாதவர்களாயிருப்போம். ஏனென்றால் முழு உலகத் தின் மேல் அவர் கொண்டிருக்கிற மாபெரும் அன்பானது, அவர்களுடைய பாவங்களுக்கெதிராக அவருடைய நீதி யான கோபமென்னும் மேகங்களுக்குப் பின் மறைந் திருக்கிறது. அவருடைய ஞானத்தினாலே அவர் அவர் களுடைய விக்கிரகங்களை நொறுக்கி போடுவதற்காக வும், அவர்களுடைய பெருமையை தரை மட்டும் தாழ்த்து வதற்காகவும் அவர்களைக் கடுமையாக அடிக்கிறார். ஆனால் அவருடைய கோபாக்கினையின் இந்த வலி உண்டாக்குகிற காயங்கள், அவர்களை நித்திய குணமாகுதலுக்கு ஆயத்தப்படுத்தும் என்பதே அவரு டைய நோக்கமாக இருக்கிறது. "தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப் போகாமல் (நித்தியத்திற்கும் அழிந்து போகா மல்) நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளும்" அளவிற்கு உலகத்தில் அன்பு கூருகிற தேவன், இப்பொழுதும் அவர்களிடத்தில் அதே அள விற்கு அன்பு கூருகிறார். அந்த அன்பினாலே அவர்களைச் சீர்திருத்துவதற்காகப் பிரம்பைக் கையாளுகிறார். அவரு டைய ஜனங்களும் அவருடைய நியாயத்தீர்ப்புகளை அவ்வாறே கருத வேண்டுமென்று அவர் விரும்புகிறார். விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் அவர்கள் அவருடைய தயவின் சூரிய வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ளும் மனநிலைக்குள் வந்திருப்பதால், அதில் அவர் கள் களி கூரும் அதே நேரத்தில், உலகத்தாரின் பேரிடர் களின் காரணத்தையும், அதின் ஒரே நிவாரணத்தையும் அவர்கள் உலகத்தாருக்குச் சுட்டிக் காட்ட வேண்டு மென்றும் அவர் விரும்புகிறார் (ஏசா. 30:15; சங். 46:10).

3. நம்முடைய பாட வசனத்தில் "என் ஜனமே" என்ற அன்பு நிறைந்த பெயரினால் கர்த்தரால் அழைக் கப்படுகிறவர்கள் யார்? அவருடைய நாமத்தில் தங்களை

அழைத்துக்கொள்ளுகிற அனைவரும் இந்த வகுப்பிலிருக்கிறார்களா? இல்லை. ஏனென்றால் அவருடைய நாமத்தைப் பொய்யாக அறிக்கை பண்ணுகிற பலர் இருக்கிறார்கள். சங்கீதக்காரன் சொல்வதைப் போல், பலியினாலே தேவனோடே உடன்படிக்கை பண்ணினவர்கள் மட்டுமே அந்த வகுப்பிலிருப்பார்கள் (சங். 50:5). அவர்கள் எவ்வளவு சிறியவர்களாக அல்லது பெலவீனர்களாக இருந்தாலும், அவர்கள் பிரதிஷ்டை செய்த, விசுவாச உண்மைத்துவமுள்ள தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள். அவருடைய சகாயஞ் செய்யும் கிருபையினால் அவரிடத்தில் உண்மைத்துவமுள்ள, ராஜவிசுவாசமுள்ள, கீழ்ப்படிகிற பிள்ளைகளாக இருக்க வேண்டுமென்று அவர்கள் இருதயத்தில் உறுதியாகத் தீர்மானித்தவர்களாக இருக்கிறார்கள்.

*4.* தேவனுடைய ஜனங்களில் ஒருவனாக எண்ணப்படுவதென்பது மிக மேன்மையான சிலாக்கியமாக இருக்கிறது. பலர் அதைப் புரிந்து கொள்வதை விட பெரிய ஒரு காரியத்தை அது அர்த்தப்படுத்துகிறது. அதாவது தேவனுடைய ஜனங்களாக இருப்பதற்கு அவர்களுடைய பங்காக அவர்கள் இன்னும் அதிக காரியங்களைச் செய்ய வேண்டும். தேவனும் அவருடைய பங்காக அவர்களுக்கு மிக அதிகமாகச் செய்கிறார். அதில் அவர்களுடைய பங்கு இவ்வாறாயிருக்கிறது: (1) அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தை ஏற்றுக் கொள்கிற ஏதேனுமொரு பெரிய ஸ்தாபனத்தின் அங்கத்தினராக வாழுவதை அல்லாமல், கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதை இது அர்த்தப்படுத்துகிறது என்று அவர்கள் உணர வேண்டும், (2) அவர்கள் தேவனுடைய அன்பின் குமாரரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படிக்கு தங்களைத் தேவனுக்கு முழுமையாகப் பிரதிஷ்டை செய்ய வேண்டும், (3) உலகத்தின் வீண் பெருமையையும் புகழ்ச்சியையும் அவர்கள் முற்றிலும் புறக்கணிக்க வேண்டும், (4) உலகத்தின் ஆவி, பேராசைகள், நம்பிக்கைகள் மற்றும் இலக்குகளை விட்டுவிட்டு தேவனுக்கென்று ஜீவிக்க உண்மைத்துவத்துடன் உடன்படிக்கை செய்ய வேண்டும், (5) அது மட்டுமல்ல அந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக அனுதினமும் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்க பிரயாசப்பட வேண்டும், (6) மனத்தாழ்மையுடன் தங்களுடைய சிலுவையை எடுத்துக் கொண்டு, தங்களுடைய அதிபதியும் தலையுமான யெஷுஆ கிறிஸ்துவை பின்பற்ற வேண்டும்.

*5.* தேவனுடைய பங்கில் அது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: (1)அவர் அவர்களுக்கு இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் செய்த கிருபையான வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் கிறிஸ்துவின் மூலம் நிச்சயமாக நிறைவேற்றுவார். (2) இந்த வாழ்க்கையில் அவர் நம்முடைய பிதாவாக நமக்கு வெளிப்படுத்தும் அன்பு, அக்கறை, சிட்சை, ஆலோசனை, போதனை, பாதுகாப்பு, ஊக்குவித்தல் ஆகியவைகள் முடிவு பரியந்தமும் நம்மோடிருக்கும். (3) மேலும் ராஜ்யத்தில் நாம் அவருடைய மகிமையான சமுகம், நித்தியமான இளைப்பாறுதல், சந்தோஷம், சமாதானம் ஆகியவற்றிற்குள் ஏற்றுக் கொள்ளப்படுவோம். ஆஹா, தேவனுடைய ஜனங்களாக இருப்பது என்னே ஒரு பாக்கியமாக இருக்கிறது! இந்த வாழ்க்கையிலும் கூட அவர் நமக்குக் காண்பிக்கிற தயவின் வெகுமதி நம்முடைய கற்பனை திறனுக்கு அப்பாற்பட்டதாயிருக்கிறது.

*6.* சுவிசேஷ யுகம் முழுவதும் தேவன் அவருடைய ஜனங்களை ஓநாய்களுக்குள்ளே சிதறடிக்கப்படுகிற ஆடுகளாகவும், களைகளின் மத்தியிலிருக்கும் கோதுமையாகவும் இருக்க அனுமதித்தார். ஆனால் ஏற்ற காலமாகிய சுவிசேஷ யுகத்தின் முடிவில் அவர்களைக் கூட்டிச் சேர்த்தார். பெயரளவிலான கிறிஸ்தவ சபை என்னும் பெரிய ஸ்தாபனத்தின் மத்தியில் அவர்கள் வளர்ந்துக் கொண்டிருந்தார்கள். தேவன் அந்த பெயர் சபை அமைப்பை பாபிலோன் (குழப்பம்) என்றழைக்கிறார். மனுஷர் அதைக் கிறிஸ்தவ மண்டலம் (Christendom -கிறிஸ்துவின் ராஜ்யம்) என்றழைக்கிறார்கள். தேவனுடைய சத்தியத்தின் வார்த்தையும், அவர்கள் மத்தியில் நீண்ட காலத்திற்கு வாழ அனுமதிக்கப்பட்டிருந்த அவருடைய பரிசுத்தவான்களின் போதனை மற்றும் முன் மாதிரியின் பல அனுகூலங்களும் அவர்களிடத்திலிருந்த போதிலும், கிறிஸ்துவின் போதனையையும் ஆவியையும் தவறாகச் சித்தரித்து, அவருடைய நாமத்தை எடுத்துக் கொண்ட இந்த பெரிய ஸ்தாபனத்தின் மேல் இப்பொழுது தேவன் அவருடைய உக்கிர கோபத்தை ஊற்றுகிறார். அதில் முழு உலகமும் அந்த அமைப்போடு பங்கு கொள்கிறது. ஆனால் தேவன் தம்முடைய உக்கிர கோபத்தை ஊற்றுவதற்கு முன்பே, அவருடைய ஜனங்கள் அவளை விட்டு (பாபிலோன்) வெளியே வர வேண்டுமென்றும், அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமல் இருக்க வேண்டுமென்றும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலிருக்க வேண்டுமென்றும் அவர்களை எச்சரித்தார் (வெளி.18:4). ஆனால் இவ்வாறு பாபிலோனை விட்டு வெளியே வர அவர்களை அழைக்கும் போது, வேறொரு இடத்திற்குள் அல்லது நிலைக்குள் பிரவேசிக்கவும் அவர் அவர்களை அழைத்தார் - "நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள்."

*7.* இந்த மறைவிடமானது சர்வ வல்லவருடைய நிழலின் கீழுள்ள, உன்னதமானவரின் மறைவாக இருக்கிறது (சங். 91:1). அன்பானவர்களே, உன்னதமானவரின் இந்த மறைவிடமானது, ஜெபமென்னும் ஆசீர்வாதமான சிலாக்கியத்தின் மூலமும், அவருடைய அருமையான வார்த்தையிலுள்ள விசுவாசத்தின் மூலமும், அவர் வாக்குத்தத்தம் செய்த பரிபாலன அக்கறையின் மூலமும் அவரோடு நாம் கொள்கிற நெருங்கிய பந்தம் மற்றும் ஐக்கியத்தின் இடமாக இருக்கிறது. ஆஹா, இந்த மறைவிடம் என்னே அருமையானதாக இருக்கிறது! இப்பொழுது முழு உலகத்தையும், விசேஷமாகக் கிறிஸ்தவ மண்டலத்தின் நாடுகளையும் கொந்தளிக்க செய்கிற கிளர்ச்சியின் மத்தியில் நாம் என்னே இளைப்பாறுதலையும் புத்துணர்ச்சியையும் கண்டடைகிறோம்! - திருப்தியளிக்காத இக்காலத்தின் சமுதாய அமைப்பை சரி செய்வதற்குப் பயனற்ற முயற்சிகளைச் செய்கிற மனுஷரின் அகங்காரத்திலிருந்தும் மதிக்கேட்டிலிருந்தும் இளைப்பாறுகிறோம்; மனுஷ பாரம்பரியங்களினால் உண்டான இக்காலத்தின் குழப்பத்தை நீக்கிப்போடாமல், அதிலிருந்தே சத்தியம் மற்றும் நீதியின் தெளிவான கொள்கைகளை உருவாக்குவதற்கு வீணாக முயற்சி செய்கிற நாவுகளின் சண்டையிலிருந்தும் நாம் இளைப்பாறுகிறோம் (சங். 31:20). இந்த மறைவிடத்தில் நாம் உலகம் கொடுக்கக் கூடாததும் எடுத்துக் கொள்ளக் கூடாததுமான இளைப்பாறுதலையும், சமாதானத்தையும் வெளிச்சத்தையும் சந்தோஷத்தையும் காண்கிறோம்.

*8.* தேவனோடு நடப்பதற்காக மட்டுமே, உலகத்தாரிடமிருந்தும் பெயர் கிறிஸ்தவ சபையின் பல்வேறு ஸ்தாபனங்களிலிருந்தும், உலகத்திலிருந்தும் இவ்வாறு

விலகுகிற நம்முடைய நோக்கங்களைச் சிலர் மட்டுமே புரிந்து கொள்வார்கள். அவருடைய நாமத்தின் நிமித்தம் நாம் பல நிந்தைகளை சகிக்க வேண்டும். ஆனால் பயப்படாதிருங்கள்: உங்கள் "கதவுகளைப் (விசுவாசத் தின் கதவுகள்) பூட்டி கொள்ளுங்கள்". அந்த நிந்தை களுக்கு செவி சாய்க்காதிருங்கள், அவைகளைக் கவனி யாதிருங்கள் *(ஏசா. 8: 12, 13)*. பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத் தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக (உனக்கு முன் னிருக்கிற போருக்காக) விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்" *(எபே. 6:16)*. அதன் மூலம் மட்டுமே நாம் நிலை நிற்போம்.

*9.* நமக்கு மிகவும் தேவையாயிருக்கிற இந்த காலத்தில், கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் கிறிஸ்த வனின் சர்வாயுத வர்க்கத்தின் இந்த பகுதியின் மதிப்பை கருத்தில் கொள்வது மிகவும் முக்கியமானதாகும். அவர் களுடைய விசுவாசத்தின் கதவுகள் அவர்களை உன்னத மானவரின் மறைவிடத்தில் முழுமையாக மறைக்க வேண்டும். அவர்கள் அவருடைய நாமத்தைத் தூக்கி பிடிப்பதின் நிமித்தம், அவர்கள் மேல் நிந்தைகள் கடுமை யாகவும் வேகமாகவும் விழும்போதும், அவர்கள் விசுவாசத்தை விட்டுவிட்டு கட்டுகதைகளைப் பின்பற்று கிறார்கள் என்று அவர்கள் குற்றஞ் சாட்டப்படும் போதும், கர்த்தருடைய கோபம் அவர்கள் மேலிருக்கிறது என்றும், கிறிஸ்துவின் நிமித்தம் அவர்கள் படுகிற பாடுகள் அவர்களுக்கு அளிக்கப்படுகிற தண்டனைகள் என்றும் மற்றவர்கள் சொல்லும் போதும், அவர்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போதும், நீண்ட காலமாக கர்த்தருடைய ஜனங்கள் என்று கருதப் பட்டவர்களின் கூட்டத்திலிருந்து வெளியேற்றப்படும் போதும், விசுவாசமென்னும் கேடகத்தை இன்னும் உறுதியாக பற்றி பிடித்துக் கொள்வதற்கும், சங்கீதக்கார னின் வெற்றிகரமான வார்த்தைகளை நமதாக்கிக் கொள்வதற்கும் *(சங். 27:1, 3, 5, 10; 23:1,4; 56:4)*, அதுவே ஏற்ற காலமாகும். இவ்விதமான ஒரு விசுவாசத்தை நம்மில் ஊக்குவிப்பதற்காகவே, கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றிற்கும் கூடுதலாக, நாம் அவரிடத்தில் எளிமை யான, சிறு பிள்ளைகளுக்கொத்த விசுவாசம் வைக்கும் படிக்கு நம்மை உற்சாகப்படுத்தும் பல வார்த்தைகளையும் கொடுத்திருக்கிறார். மேலும் மனுஷருடைய நிந்தை களுக்குச் செவி சாய்க்கக் கூடாதென்று நமக்குக் கட்டளையிடுகிறார் *(ஏசா. 51:7, 12, 13, 16)*

## நம்முடைய மறைவிடம் சம்பந்தமாக நம்முடைய பங்கு

*10.* எதிராளியானவனின் அக்கினியாஸ்திரங்கள் நம்முடைய இருதயங்களைக் காயப்படுத்தும் போது, சர்வவல்லமையுள்ள தேவன் நம்முடைய பெலவீனங் களை இவ்வாறு கருத்தில் கொண்டு, அவருடைய ஆறுத லின் பிசின் தைலத்தை நம்மேல் ஊற்றி, நமக்காக எவ்வளவாய் இறங்கி வருகிறார்! கிறிஸ்துவின் மூலம் விடுவிக்கப்பட்ட அவருடைய பிள்ளைகளில் எந்த ஒரு வனும் திரும்ப மனுஷருக்குப் பயப்படும் அடிமைத்தனத் திற்குள் செல்ல அவர் விடமாட்டார் *(நீதி. 29:25)*. கிறிஸ்து வுக்குள்ளிருக்கிற ஒவ்வொருவனும், பாவத்திலிருந்தும் மூடநம்பிக்கையிலிருந்தும் அடைந்த விடுதலையையும் அவனுடைய சிந்தனைகள், வார்த்தைகள், செயல்கள் எல்லாவற்றிற்காகவும் தேவனுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டுமென்பதையும் உணர வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

*11.* கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற ஒவ்வொரு தனி நபருக்கும் விசுவாசம் மற்றும் நடத்தையின் காரியங்களில் தனிப்பட்ட பொறுப்பு இருக்கிறதென்று தேவன் அவ னுக்கு நினைப்பூட்டுகிறார். தேவனுடைய வார்த்தை மட்டுமே ஒரே அதிகார பூர்வமான தரமாக இருக்கிற தென்று ஏற்றுக் கொண்டு, சத்தியம் மற்றும் நீதி என்ன வென்பதை நிரூபித்த பிறகு தான், அவன் உறுதியான ஒரு நிலையை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று" பகுத்தறிந்தப் பிறகு (நிரூபித்தப் பிறகு), எந்த காரியமும் அவனுடைய விசுவாசத்தைக் குலைக்கவோ, அவனுடைய கடமையிலிருந்து பின்வாங்க செய்யவோ கூடாது. மனுஷருக்குப் பயப்படுகிற எவ்வித பயமும் அவனைத் திரும்ப மூடநம்பிக்கை, மனுஷ பாரம்பரியங்கள் அல்லது மற்றவர்களின் கருத்துகள் ஆகியவற்றின் அடிமைத்தனத்திற்குள் கொண்டு போகக் கூடாது. ஒவ்வொரு நபரும் தனிப்பட்ட முறையில் தேவ வார்த்தை என்னும் திசை காட்டியைக் கொண்டு தன்னு டைய வேலையையும், கோட்பாடுகளில் தன்னுடைய விசுவாசத்தையும், தன்னுடைய வாழ்க்கையின் நடத்தை யையும் நிரூபித்துக் கொள்ள வேண்டும். அப்போது நம்முடைய விசுவாசமானது, எந்த மானிட செயலியக்கி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதாக இருந்தாலும், அது கர்த்தருடைய வார்த்தையின் மேல் எவ்வளவு உறுதி யாக நிலைநாட்டப்பட்டிருக்குமென்றால், அது அவனு டைய சொந்த விசுவாசமாக இருக்கும் அளவிற்காகும். அந்த விசுவாசம் மற்றெந்த ஒருவனையும் எவ்விதத்திலும் சார்ந்திருக்காது.*(1 தெச. 5:21; கலா. 6:4)*.

*12.* தெய்வீக அகத்தூண்டுதலினால் கொடுக்கப் பட்ட வார்த்தையைக் கொண்டு எல்லா காரியங்களையும் தனிப்பட்ட முறையில் நிதானித்தறிவது ஒவ்வொரு நபரின் கடமையாகவும் உரிமையாகவும் இருக்கிறதென்ற அடிப்படை கொள்கையை அசட்டை செய்ததினால் தான், சபை பெரிய அக்கிரமத்தின் வீழ்ச்சி என்னும் கண்ணிக் குள் அகப்பட்டது. இந்த கொள்கையை அசட்டை செய்த தினால் தான், விசுவாசம் மற்றும் நடத்தையின் காரியங் களில் மனுஷருக்குக் கட்டளையிடவும், அவர்களுடைய மனச்சாட்சிகளைப் புரட்டவும் இழிவான போப்புகள் உருவானார்கள். "சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள்; அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக" *(ஏசா. 8:13)* என்ற கட்டளையை நாம் நினைவு கூருவோமாக. அவருக்குப் பிரியமில்லாமல் நடப்பதைக் குறித்து மட்டுமே நாம் பயமும் அச்சமும் கொள்வோமாக. நாம் நம்முடைய மனதில் மட்டுமல்ல, நம்முடைய இருதயத்திலும் நீதியை அறிந்து கொண்டு, நீதியை நேசித்து, தேவனுடைய நியாயப்பிரமாணத் தைப் பற்றிக்கொள்ளும்படி கவனமாயிருப்போமாக. ஏனென்றால் அவ்வாறு செய்வதின் மூலம் மட்டுமே நாம் அவரால் ஏற்றுக் கொள்ளப்படுவோம். இவ்வாறான விசுவாசதுடன் தொடர்ந்து கர்த்தரைச் சார்ந்திருந்து, விசுவாசத்தின் மூலம் அவர் அளிக்கிற பலத்தில் பெலனடைந்து, சத்தியத்திற்கும் நீதிக்கும் தைரியமாக ஊழியஞ் செய்ய முன்வருபவர்களுக்கு மட்டுமே, பயப் படாதே உனக்கு ராஜ்யத்தில் ஒரு பங்கைக் கொடுக்க உன் பிதா பிரியமாயிருக்கிறார் என்ற ஆசீர்வாதமான உறுதி யளிக்கப்படுகிறது.

*13.* எல்லா மனுஷரையும் தனிப்பட்ட முறை

யிலும் ஒரு கூட்டமாகவும் பாதிக்கிற உபத்திரவத்தின் கடும் புயல், உலகம் முழுவதையும் இக்காலத்தில் முழுமையாகச் சூழ்ந்து கொள்ளும்போது, கர்த்தருடைய ஜனங்கள், அவருக்கு இன்னும் அதிகமாக நெருங்கி செல்ல, அவரோடு அவர்கள் கொள்கிற ஒருமைப்பாடு, ஐக்கியம் மற்றும் இளைப்பாறுதலின் மறைவிடத்திற்குள் இன்னும் முழுமையாகப் பிரவேசித்து, விசுவாசம் என்னும் கதவுகளைப் பூட்டி கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதின் மூலம் மட்டுமே அவர்கள் மற்ற அனைவரையும் பிடித்துக் கொள்ளும் திகிலிலிருந்தும், அச்சத்திலிருந்தும், நடுக்கத்திலிருந்தும் அங்கே பாதுகாப்பாக மறைக்கப்படுவார்கள். இந்த உபத்திரவ காலத்தில் அவர்களுடைய இம்மைக்குரிய நலன்கள் மேல் வரும் விளைவுகளை அவர்கள் பொறுமையோடு சகிக்கும்போது, வாழ்க்கையின் சூறாவளிகள் மற்றும் புயல்களின் மத்தியிலிருந்து மட்டுமல்ல அமைதியான நேரங்களிலும் கூட தேவனுடைய மேலாதிக்கம் செய்யும் பரிபாலனம் அவர்களோடு இருக்குமென்று அறிந்து களி கூருவார்கள். மேலும் அவருடைய கோபாக்கினை இவ்வாறு "ஒரு நிமிஷம்" மாத்திரமே வெளிப்படுமென்றும், அதற்குப் பிறகு அவருடைய நீதியான ராஜ்யம் வல்லமையுடனும் மிகுந்த மகிமையுடனும் வெளிப்படுமென்றும், அந்த ராஜ்யத்தில் அவர்கள் ஊழியக்காரர்களாக இருக்கும் சிலாக்கியத்தை பெற்றுக் கொள்வார்களென்றும், அவர்களுக்கு அளிக்கப்படுகிற ஆசீர்வாதமான நிச்சயத்திலும் களிகூருவார்கள்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

# கிறிஸ்தவ குணாம்சத்தை நிறைவாக்கும் பண்புகள்

***PT# 349, Dec. 1947, pp. 195-203***

"கடைசியாக, சகோதரரே,
உண்மையுள்ளவைகளெவைகளோ,
ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ,
நீதியுள்ளவைகளெவைகளோ,
கற்புள்ளவைகளெவைகளோ,
அன்புள்ளவைகளெவைகளோ,
நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ,
புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ
அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்"
பிலி. *4:8*

*1.* **பொ**துவாக மனுகுலமானது மிக குறைவாகவே சிந்திக்கிறது. மேலும் அது செய்கிற குறைவான சிந்தனையும் கூட அதிகமாகவோ குறைவாகவோ தவறான காரியங்கள் சம்பந்தமாகவும், தவறான அடிப்படைகள் அல்லது கருத்துகளின்மேல் கட்டப்பட்டதாகவும் இருக்கிறது. இருந்தாலும் மனுகுலத்தின் நலன் சம்பந்தமாக இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லா வல்லமைகளைவிட, சிந்தனைக்கு அதிக வல்லமை இருக்கிறதென்று எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். ஆனால் இது எவ்வளவு உண்மை என்று சிலர் மட்டுமே உணருகிறார்கள். அதாவது அவர்களுடைய சொந்த சந்தோஷமும் நலனும் கூட எந்த அளவிற்குச் சரியான சிந்தனையைச் சார்ந்ததாக இருக்கிறதென்றும், ஜன சமுதாயங்கள் மற்றும் நாடுகளின் சந்தோஷம் அல்லது துக்கமும் கூட



எந்த அளவிற்கு அவர்கள் வாழ்க்கையின் முக்கியமான பிரச்சனைகளைக் குறித்துச் சரியாக அல்லது தவறாகச் சிந்திப்பதைச் சார்ந்திருக்கிறதென்றும் சிலர் மட்டுமே உணருகிறார்கள்.

*2.* வார்த்தைகள் இவ்வுலகத்தில் ஒரு வல்லமையாக இருக்கின்றன. ஆனால் அவைகள் எந்தளவிற்குச் சிந்தனைகளைத் தூண்டி, செயல்களுக்கு வழி நடத்துகின்றனவோ, அந்தளவிற்கு அவைகள் வல்லமையுள்ளவைகளாக இருக்கின்றன. கேட்கப்பட்ட வார்த்தைகள், அவைகளால் தூண்டப்பட்ட சிந்தனைகள், அவைகளால் உண்டான செயல்கள் - இதுவே சரியான வரிசையாகும். "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" என்று ஞானவான் உண்மையாகச் சொல்லி இருக்கிறார் (நீதி.*23:7*). ஒருவன் நீதியாகச் சிந்தித்தால், நீதியாகப் பேசவும் செயல்படவும் செய்வான். அவனுடைய சிந்தனைகள் சுயநலமாகவும் இழிவாகவும் இருந்தால், அவனுடைய வார்த்தைகள் வஞ்சனையானவைகளாகவும், அவனுடைய நடத்தை நேர்மையற்றதாகவும் இருக்கும்.

*3.* சிந்தனையின் வல்லமையைப் பலர் அதிகமாக உணருவதால் மற்றவர்களின் சிந்தனைகளில் மாற்றத்தை உண்டு பண்ணும் முயற்சிகளை நாம் எப்பக்கத்திலும் காண்கிறோம். ஒரு ஆசிரியர் சிந்தனைகளில் மாற்றம் உண்டு பண்ண முயலுகிறான். ஒரு பிரசங்கியும் அதையே செய்கிறான். அரசியல்வாதியும் அதையே செய்கிறான். நிதி நிர்வாகியும் அதையே செய்கிறான். சமூகவியல் வல்லுநரும் அதையே செய்கிறான். எப்பக்கத்திலும் எல்லா பாஷைகளிலும் வெளியிடப்படுகிற ஆயிரக்கணக்கான புத்தகங்கள், கைப்பிரதிகள், செய்தித்தாள்கள், பத்திரிக்கைகள் எல்லாம் சிந்தனையில் மாற்றமுண்டுபண்ண முயலுகின்றன. ஒவ்வொரு துறையிலும் முழு உலகத்தையும் இயங்கச் செய்கிற பெரிய இயந்திரம் சிந்தனையாகும் என்று சொல்லலாம்.

*4.* ஆனால் இதில் பிரச்சனை என்னவென்றால் சிலர் மட்டுமே ஞானமாகவும் பகுத்தறிவுக்கு இணக்கமாகவும் சிந்திக்கும் மனமுடையவர்களாக இருக்கிறார்கள். வீழ்ச்சியானது, மனுகுலத்தின் ஒவ்வொரு அங்கத்தினரையும் பாதித்திருப்பதால், நம்முடைய பகுத்தறிந்து நிதானிக்கும் திறமைகள் சீர்குலைந்திருக்கின்றன. போலி வைத்தியர்களும், கிளர்ச்சி தலைவர்களும், சுயநலவாதிகளும், பலமுறை மனிதர்களின் பெலவீனமான மனநிலையைத் தங்களுடைய சொந்த நலனுக்காகப் பயன்படுத்திக் கொண்டு, வஞ்சகமான பேச்சினால் அவர்களை ஏமாற்றுகிறார்கள். இவ்வாறாக அவர்கள் சரியான சிந்தனைக்கும் பகுத்தறிவுக்கும் இடறலுண்டாக்கி, அதைத் தெளிவற்றதாக ஆக்குகிறார்கள். மனுகுலமானது, அதின் ஒவ்வொரு

அங்கத்தினரின் சுயநலமென்னும் பெரிய வல்லமை யினாலும், சாத்தானுடைய தந்திரங்களினாலும் எதிர்க்கப் பட்டு, இவ்வாறு கடுமையாகப் பாடுபடுகிறது. ஆகையால் பொதுவாக மனுகுலம் தவறாக நடத்தப்பட்டு வஞ்சிக் கப்படுகிறது என்பதில் ஆச்சரியமில்லை. ஏனென்றால் அது பொய்யான கருத்துகளென்னும் கோரமான சத்துரு வுக்குக் கூடுதலாக, பொதுவாக மரபு வழியாகப் பெற்றுக் கொண்ட சோம்பல், மந்தமான தன்மை, திறமையின்மை ஆகியவற்றிற்கும் எதிராகப் போராட வேண்டும்.

*5.* நம்முடைய கர்த்தரும் கூட அவருடைய வார்த்தையின் மூலம் நம்முடைய மனதின் வல்லமையை உபயோகிக்க நம்மைத் தூண்டி நம்மில் மாற்றமுண்டு பண்ண முயலுகிறார். அவருடைய ஜனங்கள் "அவர்கள் மனம் புதிதாகுகிறதினாலே மறுரூபமாக வேண்டும்" என்று உறுதியாகக் கூறுகிறார் (ரோம.12:2). சிந்தனையின் வல்லமையை வளர்த்துக் கொள்வதென்பது தேவ னுடைய ஜனங்களோடு தொடங்கினது என்று நாம் சொல்லலாம். மேலும் மத ரீதியான காரியங்களைப் பொறுத்தவரை அது தொடர்ந்து அவர்களில் நடந்து கொண்டிருக்கிறது. மெய் தேவ நம்பிக்கையற்ற ஜனங் களின் மதகோட்பாடுகள் அறிவாற்றலைக் கட்டுப்படுத்தி, பிரதானமாக உணர்ச்சிகளையும் முற்சாய்வு- தப்பெண் ணங்களையும், அச்சங்களையும் தூண்ட முயலுகின்றன. ஆனால் கர்த்தர் அதற்கெதிர்மாறாக "வழக்காடுவோம் வாருங்கள்" *[KJV let us reason together* – ஒன்றுகூடி பகுத்தறிந்து நிதானிப்போம் வாருங்கள்] என்று தம்முடைய ஜனங்களை அழைக்கிறார் (ஏசா. 1:18). பெயரளவிலான கிறிஸ்தவ மண்டலம் கர்த்தருடைய இந்த அழைப்புக்கு அதிகமாகச் செவி சாய்க்கவில்லை என்று நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். பெயரளவில் மட்டுமே கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் பொதுவாக மத ரீதியான காரியங்களைக் குறித்துச் சிந்திக்க தவிர்க் கிறார்கள். விசேஷமாகப் பகுத்தறிந்து நிதானிப்பதைத் தவிர்க்கிறார்கள். ஆனால் எந்தளவிற்கு அவர்கள் இவ் வாறு தெய்வீக ஏற்பாட்டை மீறுகிறார்களோ அந்தள விற்கு அவர்கள் "பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்கள்" இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அதிக பட்சத்தில் கிறிஸ்து வுக்குள்ளிருக்கிற குழந்தைகளாக மட்டுமே கருதப்பட வேண்டும் (எபி. 5:13,14).

*6.* நம்முடைய பகுத்தறிந்து நிதானிக்கும் திறமைகளின் அப்பியாசித்தலின் அடிப்படையாக, சரி யான அறிவில்லாமல் சிந்திப்பது, மிகவும் அபாயமான ஒரு காரியமாகும் என்று நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். ஆனால் இந்த விஷயத்தில் கர்த்தர் அவருடைய விசுவாச உண்மைத்துவமுள்ள ஜனங்களைப் பாதுகாத்திருக்கிறார். ஏனென்றால் நம்முடைய சிருஷ்டிகரிடமும் நம்முடைய சக மனிதர்களிடமும் நமக்கிருக்கும் கடமை சம்பந்தப் பட்ட எல்லா காரியங்களையும் குறித்து, நிதானிப் பதற்கான சரியான அடிப்படையை, கர்த்தர் நமக்கு அவருடைய வார்த்தையில் கொடுத்திருக்கிறார். வேதாக மத்தில் சில பொதுவான கருத்துகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்த வெளிப்பாட்டின் கருத்துகளின் வரையறைக்குள் பகுத்தறிந்து நிதானிக்க வேதாகமம் தேவனுடைய ஜனங்களை அழைக்கிறது. மேலும் அவ்வாறு நிதானிப்பதின் மூலம், கர்த்தர் தயவுள்ள வரென்று ருசி பார்த்து அறிந்து கொள்ளவும், அவரைப் பற்றி இன்னும் தெளிவான அறிவைப் பெற்றுக் கொள் ளவும், அவருடைய குணாம்சம் மற்றும் திட்டத்தைப் பற்றி இன்னும் சிறப்பான புரிந்து கொள்ளுதலைப் பெற்றுக் கொள்ளவும், தேவனுடைய ஜனங்களை அழைக்கிறது.

*7.* சுயாதீனமாகச் சிந்திக்கும்படிக்குத் தூண்டப் பட்டிருக்கிற பலர், தெய்வீக வெளிப்பாட்டின் வரையறை களைக் குறித்து அக்கறையற்றவர்களாக இருக்கிறார் கள். அவர்கள் தேவ கட்டுப்பாட்டின் கீழ் வராததால், அவர்களுக்குத் தேவ வார்த்தையினால் கிடைக்கிற மன ரீதியான சுயாதீனமும் அறிவும், உரிமை துஷ்பிரயோகம், சுயநலம், தற்பெருமை மற்றும் உண்மைத்துவமின்மை யின் மிதமிஞ்சிய எல்லைக்கு அவர்களைக் கொண்டு செல்லும். வேதாகமம் எந்த இடங்களுக்குச் சென்றிருக் கிறதோ அந்த இடங்களிலெல்லாம் அது நாகரீகத்தை முன்னேற செய்கிற வெளிச்சமாக இருந்தது. கோடிக் கணக்கானவர்கள் அதின் பிரகாசிப்பிக்கும் தாக்கத் தினால் பயனடைந்திருக்கிறார்கள். ஆனால் மிக சிலர் மட்டுமே அதின் வெளிச்சத்திற்கு நெருக்கமாகவும், அந்த வார்த்தை கட்டளையிடுகிற பகுத்தறிவு மற்றும் நடத்தை யின் வரையறைகளுக்குள்ளும் நடக்கிறார்கள். இந்த சிலர் மட்டுமே உண்மையான கிறிஸ்தவர்களாக இருக் கிறார்கள். சுவிசேஷ யுகத்தில் அவர்கள் தேவன் அறுவடை செய்த "கோதுமையாகவும்" "தேவனுடைய சிருஷ்டிகளில் முதற் பலன்களாகவும்" இருந்தார்கள் (யாக். 1:18).

## சிந்தனைகளைக் கட்டுப்படுத்துவது

*8.* ஒரு மனிதனுடைய மூளையானது மற் றெல்லா மனிதர்களுடைய மூளையிலிருந்து ஓரளவுக்கு வித்தியாசப்பட்டிருப்பதால், ஒவ்வொருவனுடைய சிந்த னையும் கட்டாயமாக வெவ்வேறாக இருக்குமென்று சிலர் எண்ணுகிறார்கள். வேறு வார்த்தைகளில் சொன் னால் ஒரு மனுஷன் அவனுடைய மூளையின் அமைப் பிற்கு இணக்கமாக மட்டுமே சிந்திக்க முடியுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் அது அவ்வாறு இல்லையென்று நாங்கள் பதிலளிக்கிறோம். ஒவ்வொரு வனும் அவனுடைய சிந்தனைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, சில சிந்தனைகளைக் கட்டுப்படுத்தவும், மற்றவைகளை ஊக்குவிக்கவும் கற்றுக் கொள்ளக் கூடியவனாயிருக் கிறான். ஆனால் அவ்வாறு செய்வதற்கு, ஒவ்வொரு வனும் பின்பற்ற வேண்டிய குணாம்ச இலக்கானது, அவனுக்கு முன்னிருப்பது அவசியமானதாகும். நாம் நம்முடைய வார்த்தைகளையும் செயல்களையும் கட்டுப் படுத்தக் கூடியவர்களாக இருப்பதைப் போலவே, நம் முடைய சிந்தனைகளையும் கட்டுப்படுத்தக் கூடியவர் களாக இருக்கிறோம். ஆனால் அதைத் தீர்மானித்துச் செயல்படுத்தும் காரியம், நம்முடைய சித்தமாக இருக் கிறது. அது எந்த சிந்தனைகளுக்கும் உணர்வுகளுக்கும் இடங் கொடுத்து ஊக்குவிக்கும் என்றும், எந்த சிந்த னைகளை எதிர்க்கும் என்றும் தீர்மானிக்க வேண்டும்.

*9.* ஆகையால் முதலாவதாக நம்முடைய சித்தம் சரியாக நடத்தப்படுவது அவசியமானதாகும். அடுத்ததாக அது உறுதியுள்ளதாக இருப்பதும் அவசியமானதாகும். மேலும் அது அதின் வல்லமையை, சிந்தனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உபயோகிக்க வேண்டும். தீமை யானவைகள் என்று அது கண்டுணருகிற சிந்தனைகளை அடக்க வேண்டும். நன்மையான, உபயோகமான மற்றும் நன்மையை விளைவிப்பதாக அது கண்டுணருகிற சிந்தனைகளை ஊக்குவிக்க வேண்டும். இந்த சித்தமே வேதாகமத்தில் "இருதயம்" என்ற வார்த்தையின் ஒரு அர்த்தமாக இருக்கிறது. ஆகையால் கர்த்தர் அந்த

சித்தத்தினிடத்தில் சில அழைப்புகளைக் கொடுக்கிறார். ஏனென்றால் இப்பொழுது அவர் மனுஷரின் மத்தியில் அவருக்குப் பிரதிஷ்டை செய்தவர்களை மட்டுமே தேடு கிறார். "என் மகனே உன் இருதயத்தை (உன் சித்தத்தை) எனக்குத் தா" என்பதே அவர் கொடுக்கிற செய்தியாக இருக்கிறது. இந்த வேண்டுகோள் விருப்பத்துணிவுடன் பாவஞ் செய்கிறவர்களுக்குச் சொல்லப்படவில்லை. ஏனென்றால் அவர்கள் தேவனுடைய குமாரர்களாக அங்கீகரிக்கப்படவோ அழைக்கப்படவோ இல்லை. அவர்கள் பொல்லாங்கனின் பிள்ளைகளாக இருக்கிறார் கள்.

*10.* மனந்திரும்புதலின் மூலமும், மீட்பராகிய கிறிஸ்து யெஷுஆவில் விசுவாசத்தின் மூலமும் பாவ மன்னிப்பைப் பெற்று, தேவனோடு இசைவிணக்கத் திற்குள் கொண்டு வரப்பட்டவர்களை மட்டுமே தேவன் தம்முடைய பிள்ளைகளாக அங்கீகரிக்கிறார். இவர் களுக்கு மட்டுமே கர்த்தர் இந்த அழைப்பைக் கொடுக் கிறார். அதாவது அவர்கள் பூரணத்துவத்தை அடைய விரும்பினால், அவர்கள் சம்பந்தமாக அவர் கொண்டிருக் கிற தயவான நோக்கங்களை முழுமையாக அடைய விரும்பினால், அவர்கள் பிரதிஷ்டையில் அவர்களுடைய இருதயத்தை, அதாவது சித்தத்தை அவருக்குக் கொடுப் பதே ஒரே சரியான வழியாகும் என்று கர்த்தர் அவர்களுக்குத் தெரிவிக்கிறார். இவ்வாறு தேவனுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட இருதயம் அல்லது சித்தம் என்பது, தெய்வீக சித்தத்தை அறிந்து கொள்ளப் பிரயாசப்படும். தெய்வீக சிந்தனைகளைப் புரிந்து கொண்டு, வார்த்தையிலும் கிரியையிலும் அவருக்குக் கீழ்ப்படிய நாடும். புது மனதின் இந்த நிலையை எந்தளவிற்கு அடைகிறோமோ அந்தளவிற்கு ஒவ்வொரு அம்சத்திலும், அதாவது ஆசைகள், நம்பிக்கைகள், மென்னுணர்வுகள் முயற்சிகள் ஒவ்வொன்றிலும் புதி தான ஜீவனுடையவர்களாக இருக்க தொடங்குவோம். இதற்காகவே தெய்வீக சித்தம் மற்றும் திட்டத்தைப் பற்றிய வெளிப்பாடு விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படு கிறது. அதாவது அந்த வெளிப்பாட்டைப் பற்றிய அறிவில் வளருவதின் மூலமும், அந்த காரியங்களைக் குறித்து சிந்திப்பதின் மூலமும், தெய்வீக திட்டத்தினாலும் சித்தத்தினாலும் மனதை நிரப்பி கொள்வதின் மூலமும், அந்த வெளிப்பாட்டின் மறுரூபமாகும் தாக்கம் வாழ்க் கையின் ஒவ்வொரு காரியத்திலும் செயல்படும்.

## நம்முடைய பாட வசனம் பிரதிஷ்டை செய்தவர்களுக்குச் சொல்லப்பட்ட வசனம்

*11.* சரியான சிந்தனையைக் குறித்து நம்முடைய பாட வசனத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகள் பாவி களுக்கும் தீமை செய்பவர்களுக்கும், தீமையாகச் சிந்திப் பவர்களுக்கும் எழுதப்படுகின்றனவென்று பலர் பொது வாக எண்ணுகிறார்கள். ஆனால் இது தவறான ஒன்றாகும். பிலிப்பியர்களுக்கு எழுதப்பட்ட நிருபம் முழுவதும் "பிலிப்பு பட்டணத்தில் கிறிஸ்து யெஷுஆ வுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும்" *(பிலி. 1:1).* எழுதப்படுகிறது. ஆகையால் இந்த புத்திமதியானது எங்குமுள்ள பிரதிஷ்டை செய்த அனைவருக்கும் கொடுக் கப்படுகிறது. மற்ற எவர்களுக்கும் இல்லை. கர்த்தருக் கென்று தங்களை முழுமையாக பிரதிஷ்டை செய்யாத உலகத்தாருக்கும் விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட வில்லை. மற்றவர்களுக்கு இந்த காரியங்களைச் சொல்லு வது பயனற்றதாகும். இந்த புத்திமதி அவர்களில் எந்த விளைவையும் உண்டு பண்ணாது.

*12.* ஆகையால் இந்த பாடத்தின் புத்திமதி அதிகமாக முன்னேற்றமடைந்த கிறிஸ்தவர்களைத் தவிர மற்ற எவர்களுக்கும் விசேஷமாகப் பொருந்தாது. "கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக" இருக்கிறவர்களுக்கும் பொருந்தாது. புதிதான ஜீவனில் ஓரளவிற்காவது பக்கு வமடைந்தவர்களுக்கு மட்டுமே இந்த புத்திமதி பொருந்தும். பிரதிஷ்டையில் அதிகமாக முன்னேற்ற மடையாத "குழந்தைகளின்" கவனமானது, இன்னும் எளிமையான அடிப்படை பாடங்களிலும், பிரதிஷ்டை செய்தவர்கள் வெறுத்து போராட வேண்டிய மோசமான பாவங்கள் சம்பந்தமாகவும் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும். ஆகையால் இந்த பாட வசனமானது, "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க" தங்களைச் சுத்திகரித்துக் கொள்வதிலும், இருதயத் திலும் இயன்றவரை சரீரத்திலும் பரிசுத்தமாகுதலைப் பூரணப்படுத்திக் கொள்வதிலும் *(2கொரி. 7:1).* அதிக முன்னேற்றமடைந்தவர்களுக்குச் சொல்லப்படுகிறது. இந்த வசனத்தின் சூழ்நிலை அமைப்பும் இந்த காரியத்தை நிரூபிக்கிறது. ஏனென்றால் அதற்கு முன் அப்போஸ்தலர் ஜெபத்தைக் குறித்தும் தேவனை ஸ்தோத்தரிப்பதைக் குறித்தும், எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் அவர்களுடைய இருதயங்களையும் சிந்தைகளையும் காத்துக் கொள்வதைக் குறித்தும் சொல்கிறார். இது கிருபையில் அதிக முன்னேற்றமடைந்த நிலையாக இருக் கிறது. அந்த நிலையின் நிறைவாக அல்லது அப்போஸ் தலரின் வாதத்தின் முடிவாக; மற்றும் குணாம்ச அபி விருத்தியின் செயல்முறையின் முடிவான காரியமாக, "கடைசியாக, சகோதரரே" என்ற வார்த்தைகளுடன் இந்த காரியத்தைச் சொல்கிறார்.

## "உண்மையுள்ளவைகளெவைகளோ"

*13.* ஏதேனுமொரு காரியத்தைக் குறித்துக் கேட்கப்பட வேண்டிய முதல் கேள்வி என்ன? அது உண்மையானதா அல்லது பொய்யானதா என்ற கேள்வி அல்லவா? அது பொய்யானதாக இருந்தால், அது எவ் வளவு அழகானதாக இருந்தாலும், கர்த்தருடைய ஜனங் களுக்கு அதனோடு எவ்வித தொடர்பும் இருக்கக் கூடாது. பிரதிஷ்டையின் அடிப்படையே சத்தியத்தின் மேலுள்ள அன்பென்பதாகும். சத்தியத்தின் மேலுள்ள அன்பினால் அதை அங்கீகரியாமல் போனவர்கள் *(2தெச. 2:10)*, அதா வது அநீதியில் (உண்மையில்லாதவைகளில்) பிரியப்படு கிறவர்கள் *(2தெச. 2:11)* புறக்கணிக்கப்பட்டு இடறலடை வார்கள் என்று அப்போஸ்தலரின் மூலம் கர்த்தர் அறிவித்ததை நினைவு கூருவோமாக. நாம் எவ்வளவு திறமையுள்ளவர்களாக இருந்தாலும், அற்பமான, அபூரணமான மூளை உடையவர்களாக இருப்பதால், எளிதில் தவறான வழியில் நடத்தப்படும் பெரிய அபாயம் இருக்கிறது. ஆகையால் ஒரு காரியம் உண்மையில்லாதது என்று உணரும் போது, அதனோடு எவ்வித தொடர்பும் கொள்ளக் கூடாதென்று கர்த்தருடைய வார்த்தை நமக்கு உறுதியாகச் சொல்கிறது.

*14.* ஆனால் உண்மை அல்லாத காரியங்களி லிருந்து உண்மையை வித்தியாசப்படுத்திக் கண்டறிவதற் கான சான்றுகளை, நாம் சீர்தூக்கிப் பார்க்கக் கூடா தென்பதை இது அர்த்தப்படுத்தாது. ஆனால் ஒரு காரியம் உண்மையானது என்று கண்டு கொண்டவுடனே அதை ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டு அங்கீகரிக்க வேண்டு

மென்றும்; அது உண்மையற்றதென்று உணர்ந்தவுடனே அதை வைராக்கியத்துடன் புறக்கணித்து முற்றிலும் அதை விட்டு விலக வேண்டுமென்றும் இது அர்த்தப் படுத்துகிறது. ஒரு காரியம் தப்பறையானதென்று புரிந்து கொண்டபிறகும் கூட அதனோடு ஈடுபடுவதும், ஒரு காரியம் தவறான அடிப்படையில் கட்டப்பட்டதென்று நாம் அறிந்தபிறகும் கூட, அதை எவ்வாறு நியாயப் படுத்தக்கூடும் என்று காண முயலுவதும், நம்முடைய ஆவிக்குரிய பாதங்களுக்குக் கண்ணியை வைத்துக் கொள்வதாகும். இது சீயோனை நோக்கி பிரயாணம் செய் பவர்களைப் பலமுறை இடறலடைய செய்யும். இவ் வசனத்தில் அப்போஸ்தலர் மூலம் தேவன் கொடுத்த புத்திமதியை நாம் பின்பற்றுகிறவர்களாயிருந்தால், கற் பனை கதைகள் கட்டுக்கதைகள் போன்றவைகளையும் உண்மையில்லாத எல்லாவற்றையும் தவிர்ப்போம். அதே நேரத்தில் உண்மையான காரியங்களின் மேல் அதிக பய பக்தியையும், அவைகளின் மேல் அதிக அர்ப்பணிப் பையும், அவைகளைத் தியானிப்பதற்காக அதிக நேரத்தை செலவிடுவதையும், அதின் விளைவாக நம்முடைய இருதயத்தில் சத்தியத்தின் ஆவி வளருவதையும் இது அர்த்தப்படுத்தும்.

### "ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ"

*15.* ஒரு காரியத்தின் உண்மையான தன்மையைச் சோதித்துப் பார்ப்பதென்பது, அதைச் சோதித்துப் பார்க்க வேண்டிய மற்ற பல அம்சங்களில் ஒரு அம்சமாக மட்டுமே இருக்கிறது. ஒரு காரியம் உண்மையானதென்று நாம் கண்டடையக் கூடும். இருந்தாலும் அது சிந்திப் பதற்குத் தகாத ஒன்றாக இருக்கக்கூடும். அதாவது அது ஒழுக்கமற்ற ஒன்றாக இருக்கக்கூடும். ஒழுக்கக் கேடான, அவமதிப்பை உண்டாக்கும் சிந்தனைகள் இருக்கின்றன என்று நாம் எல்லோரும் அறிவோம். அவைகளைக் குறித்துச் சிந்திப்பது விலையேறப் பெற்ற நேரத்தை வீணாக்குவது மட்டுமல்ல, அவைகளுக்காக நாம் செலவு செய்த நேரம் நமக்கு வெகுமதியை அல்லது ஆசீர்வாதத் தைக் கொண்டு வருவதற்குப் பதிலாக, நமக்கொரு இழப்பை அல்லது தீங்கை விளைவிக்கும். அது நம் முடைய மனதில் ஒழுக்கமில்லாத ஒரு கறையை உண்டாக்கும். கிறிஸ்து யெஷுஆவுக்குள் பிரதிஷ்டை செய்தவர்களாகிய நம்முடைய மனதில், அவ்வித ஒரு கறை இருப்பது, தகுதியற்றதாக இருக்கும் அல்லவா?

*16.* நாம் சிந்திக்கும்படி நம்முடைய மனதில் தோன்றுகிற உண்மையான ஆனால் ஒழுக்கக்கேடான அல்லது தகுதியற்ற காரியங்களில், மிக அதிகமாக நமக்கு வருகிற சிந்தனைகள் நம்முடைய அயலகத்தார் மற்றும் சிநேகிதர்களின் பெலவீனங்கள், தவறுகள், மூடத்தனம் ஆகியவைகள் சம்பந்தப்பட்டவைகளாக இருக்கின்றன. இவ்வித சிந்தனைகளுக்கு இடங்கொடுப்பது, அவை களைக் குறித்துத் தொடர்ந்து சிந்திப்பது, நமக்குத் தீங்கு விளைவிக்கும். இவ்வித சிந்தனைகளை நாம் எவ்வளவு விரைவாகக் கண்டு கொண்டு, எவ்வளவு விரைவாக நம் முடைய மனதிலிருந்து வெளியேற்றுகிறோமோ, அந்தள விற்கு நம்முடைய இருதயங்கள் சிறந்தவைகளாகவும், சந்தோஷமானவைகளாகவும், மேன்மையானவைகளாக வும் இருக்கும். தகுதியற்ற இவ்வித சிந்தனைகளை நாம் அகற்றும்போது, நம்மிடம் அதிக நேரமும் சக்தியும் இருக் கும். நாம் விரும்பினால் அந்தளவிற்கு அதிக நேரத்தை, கிறிஸ்து யெஷுஆவுக்குள் பிரதிஷ்டை செய்தவர்கள் சிந்திப்பதற்குத் தகுந்த, உண்மையான மற்றும் ஒழுக்க மான காரியங்களுக்காகச் செலவு செய்யக்கூடும்.

### "நீதியுள்ளவைகளெவைகளோ"

*17.* இவ்வசனத்தில் நமக்கு மற்றொரு வரையறை யும் கொடுக்கப்பட்டிருக்கிறது. காரியங்கள், அடிப்படை கொள்கைகள் முதலியவற்றின் நீதியைக் குறித்துச் சிந்திப் பதில் நம்முடைய மனம் முழுமையாக ஈடுபட வேண்டும். நாம் உண்மையான அல்லது கற்பனையான அநியாயங் களைக் குறித்தும் அநீதிகளைக் குறித்தும் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடாது. அதற்குமாறாக, "இப் பொழுதிருக்கிற பொல்லாத உலகம்" என்று வேதாகமம் அழைக்கிற காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக் கிறோம் என்பதையும், நீதி மேலோங்கி இருந்திருந்தால் அது பொல்லாத உலகம் என்று அழைக்கப்பட்டிருக்காது என்பதையும் நினைவு கூர வேண்டும். நாம் நீதி நிமித்தம் அநீதியைச் சகிக்கவும், நன்மை செய்யவும், கர்த்தருக்கும் அவருடைய வார்த்தைக்கும் ஊழியஞ் செய்வதில் நம்முடைய ஜீவனைப் பலி செய்யவும், தூஷிக்கப்பட வும், தவறாகப் புரிந்து கொள்ளப்படவும், கிறிஸ்து வின் நிமித்தம் பலவிதமான தீமையான மொழிகள் பொய் யாகச் சொல்லப்படவும் அழைக்கப்பட்டிருக்கிறோம் என் பதை நினைவு கூர வேண்டும்.

*18.* ஆகையால், பிரதிஷ்டை செய்த அனைவருக் கும் நிச்சயமாக வரும் அக்கினி மயமான சோதனை களைக் குறித்து நாம் ஏதோ புதுமை என்று திகை யாதிருக்க வேண்டும். ஆனால் நமக்குச் சோதனைகள் வருமென்பதை ஏற்றுக் கொண்டே நாம் பிரதிஷ்டை செய்திருக்கிறோம் என்பதை நினைவு கூர வேண்டும். ஆகையால் பிரதிஷ்டை வாழ்க்கையின் இன்றியமையாத காரியங்களாகிய சோதனைகள், அநியாயங்கள் முதலிய வைகளைக் குறித்து துயரப்படாமலும், அவைகளைக் குறித்து அதிகமாகச் சிந்திக்காமலும் அவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும்போது நமக்கு அதிக உபயோகமான, நம்மை அதிகமாகப் பலப்படுத்தி மேம்படுத்தும் காரியங்களைக் குறித்துச் சிந்திக்க நம் மிடம் அதிக நேரமிருக்கும். அதாவது கடந்த கால, தற் கால மற்றும் தேவனுடைய சத்தியத்தின் நல்வார்த்தையில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வருங்காலத்திற்குரிய நீதிக்கு இணக்கமாக, நியாயமான காரியங்களைக் குறித்துச் சிந்திக்க நம்மிடம் அதிகமான நேரமிருக்கும்.

### "கற்புள்ளவைகளெவைகளோ"

*19.* இவ்வுலகத்தில் நாம் எல்லா இடங்களிலும் அசுத்தமான காரியங்கள் பெரிதளவிலிருப்பதைக் காண் கிறோம். ஆகையால் கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்த ஜனங்கள் அப்போஸ்தலரின் இந்த கட்டளையைப் பின் பற்றுவது ஏற்றதாகும். அசுத்தமான காரியங்கள் இறுதி யாக நம்மை அதிகமாகவோ குறைவாகவோ தீட்டுப் படுத்தும் என்று உணர்ந்து, நாம் மிகுந்த கவனத்துடன் அசுசிகள் எல்லாவற்றையும் அகற்றி, அவைகள் நம் முடைய இருதயத்திற்குள்ளும், சிந்தனைகளுக்குள்ளும் நுழையாத படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். தூய்மை யான சிந்தனைகளைக் காத்துக் கொள்கிற ஒருவன் வார்த்தையிலும் செயலிலும் தூய்மையைக் காத்துக் கொள்வதற்கு அதிக முயற்சி செய்ய தேவையில்லை. உலகம், மாம்சம் அல்லது பிசாசு - இவைகளில் எவ் வழியாக அசுசி உண்டானாலும், அது முதலாவதாக

நம்முடைய மனதை தாக்கும். அப்போதே நாம் அதை எதிர்த்து அகற்றினால் வெற்றியடைவோம். அவ்வாறு எதிர்த்து அகற்றவில்லையென்றால், அதின் விளைவு என்னவாக இருக்குமென்று நாம் அறியோம். யாக்கோபு அப்போஸ்தலர் அறிவிப்பதைப் போல், "இச்சையானது *(ஏதேனுமொரு வகையான சுயநல ஆசை)* கர்ப்பந்தரித்து *(மனதில் புகுத்தப்படும் போது)* பாவத்தைப் பிறப்பிக்கும் *(பாவமான வார்த்தைகளையும் செயல்களையும் உருவாக்கும்)*, பாவம் பூரணமாகும் போது மரணத்தைப் பிறப்பிக்கும்" *(யாக் 1:15)*.

*20.* அப்படியானால் கற்பு *(purity)* சம்பந்தமாக நம்முடைய சிந்தனைகள் காக்கப்படுவது மிகவும் அவசியமானதென்று அப்போஸ்தலர் சொல்வதில் ஆச்சரியமில்லை. ஆகையால் ஒரு காரியம் உண்மையானதென்று உறுதியாக நிலை நாட்டப்பட்டிருந்தாலும் அதில் எவ்வித அநீதியுமில்லையென்றாலும், அது எவ்விதத்திலும் ஒழுக்கக் கேடானதாக இல்லையென்றாலும், அது கற்பற்றதாக *(impure)* இருந்தால், கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்த ஜனங்கள் சிந்திப்பதற்குத் தகுதியற்ற ஒன்றாகக் கண்டனம் செய்யப்பட வேண்டும். ஏதேனுமொரு கறை அல்லது அசுசி நம்முடைய மனதிற்குள் நுழைந்தால், அதனால் உண்டான தீட்டை அப்போது முழுமையாக நீக்குவது கடினமானதாக இருப்பது மட்டுமல்ல, பல வருடங்களுக்குப் பிறகும் அதை நீக்குவது கடினமானதாக இருக்கும்.

## "அன்புள்ளவைகளெவைகளோ"

*21.* பிரதிஷ்டை செய்தவர்கள் பணிவுநயமுள்ளவர்களாகவும் சமாதானம் பண்ணுகிறவர்களாகவும் இருக்க வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் அவ்வாறு இருப்பதற்கு அவர்கள் இனிமையான சிந்தனைகளை உடையவர்களாகவும், அழகுள்ள, மற்றவர்களின் அன்பைத் தூண்டக்கூடிய சிந்தனைகளை உடையவர்களாகவும், மென்மையான மற்றும் கனிவான சிந்தனைகளை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். அவ்வித சிந்தனைகள் படிப்படியாகக் குண நலன்களாக அபிவிருத்தியடையும். நாம் கோபத்தையும், வெறுப்பையும், சச்சரவையும் உருவாக்கும் காரியங்களைக் குறித்துச் சிந்திக்கக் கூடாது. எரிச்சலூட்டும் சிந்தனைகளையும், சண்டை செய்யும் சிந்தனைகளையும், பழிவாங்கும் சிந்தனைகளையும் நாம் தவிர்க்க வேண்டும். இவைகளெல்லாம் புதுப்பிக்கப்பட்ட மனதின் சத்துருக்களாக விலக்கப்பட வேண்டும். நாம் அழகான காரியங்களைக் குறித்தும், நம்முடைய அயலகத்தார் மற்றும் நண்பர்களைக் குறித்து அறிந்த இனிமையான காரியங்களைக் குறித்தும் சிந்திக்க வேண்டும். அவர்கள் செய்கிற அநீதியான அல்லது தீமையான காரியங்களை நாம் முழுமையாகக் கவனிக்காமலிருக்க முடியாத போதிலும், அவர்களுடைய பெலவீனங்களைக் குறித்துச் சிந்திப்பதில் நம்முடைய விலையேறப் பெற்ற நேரத்தை வீணாக்காமலிருப்போமாக. ஏனென்றால் அவ்வாறு சிந்திக்கும்போது நாம் நமக்குள்ளே இனிமையற்ற, சண்டை செய்யும் மன இயல்புகளை வளர்த்துக் கொள்வோம்.

## "நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ"

*22.* உலகமானது வெளிச்சத்தையும் வெளிச்சத்தின் பிள்ளைகளையும் வெறுப்பதாலும், அநியாயத்திலும், மற்றவர்களைச் சுயநலமாகப் பயன்படுத்திக் கொள்வதிலும் சந்தோஷப்படுவதினாலும், உலகத்தில் நற்கீர்த்தியுள்ளவைகளாக கருதப்படுகிறவைகள், தேவனுடைய ஜனங்கள் சிந்திப்பதற்குத் தகுதியான பரிசுத்த காரியங்களாக இருப்பதில்லை என்று சிலர் வாதாடக் கூடும். ஆனால் அது அவ்வாறில்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். உலகத்தார் நீதியின் தரத்தை நிச்சயமாகப் பெரிதளவில் அங்கீகரிக்கிறார்கள். ஆனால் நீதியான ஒரு தரத்தைப் பின்பற்றாதவர்களாக இருக்கிறார்கள். அந்த தரத்தைப் பின்பற்றுவதாக வெளிப்படையான தோற்றம் கூட அளிக்காதவர்களாக இருக்கிறார்கள். அந்த தரத்தின்படி நடக்க பிரயாசப்படுகிறவர்களை வெறுக்கிறார்கள், வெளிச்சத்தின் பிள்ளைகளை மாய்மாலக்காரர் என்று அழைக்கிறார்கள். நம்முடைய கர்த்தரின் காரியத்தில் செய்ததைப் போல் அவர்களைச் சிலுவையில் அறையவும்கூட செய்கிறார்கள். ஆனால் அரசாங்கம் மற்றும் பொய்யான மதங்களே பொதுவாக இந்த மதரீதியான துன்புறுத்தலைத் தூண்டிவிடுகின்றன. இருந்தாலும் ஒருவன் நற்கீர்த்தியுள்ள தரத்தைப் பின்பற்றி அந்த காரியங்களைக் குறித்து சிந்திக்கும்போது நிச்சயமாக அதில் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைக் கண்டடைவான்.

## ஜெயங்கொள்கிறவர்களுக்கு மட்டுமே வெகுமதி அளிக்கப்படும்

*23.* இவ்வாறாக ஒருவனுடைய மனதில் தோன்றுகிற உண்மையற்ற, தகுதியற்ற, அநீதியான, கற்பற்ற, இனிமையற்ற சிந்தனைகளை இவ்வாறு கூர்மையாக ஆராய்ந்து, பரிசோதித்து, புறக்கணிக்கும் போது, சிந்திப்பதற்கு வேறெந்த காரியமும் இருக்காது என்று சிலர் நினைக்கக் கூடும். பலரின் காரியத்தில் இது உண்மையாகவும் இருக்குமென்று நாங்கள் எண்ணுகிறோம். அவர்கள் தீமையான மற்றும் தகாத சிந்தனைகள் எல்லாவற்றையும் புறக்கணித்தால், கொஞ்சங் காலத்திற்கு அவர்களுடைய மனம் சிந்தனைகள் இல்லாமல் வெறுமையாக இருக்கும். ஆனால் அப்பொழுதுதான் அவர்கள் நீதியின் மேலும், சத்தியத்தின் மேலும் அழகுள்ளவைகளின் மேலும், கற்புள்ளவைகளின் மேலும், மேன்மையானவைகளின் மேலும் பசிதாகமுள்ளவர்களாக இருப்பார்கள். அதுவே கர்த்தர் அவர்களுக்காகவே ஆயத்தம் செய்த ஆவிக்குரிய ஆகாரத்தை ஏற்றுக் கொள்வதற்குரிய சரியான மனநிலையாகும்.

*24.* மேலே சொல்லப்பட்ட எல்லா பண்புகளையும் முற்றிலும் ஒன்றாக இணைத்து, உண்மையுள்ள, ஒழுக்கமுள்ள, நீதியுள்ள, கற்புள்ள மற்றும் அன்புள்ள ஒன்றாக நிரூபிக்கப்படுகிற, ஒரே ஒரு காரியம் மட்டுமே இருக்கிறது. அது தெய்வீக குணாம்சம் மற்றும் திட்டமாகும். நாம் அதின் பல்வேறு அம்சங்களைக் குறித்து சிந்திப்போமாக. நாம் தெய்வீக வார்த்தையைக் கவனமாகப் படித்து, ஒரு தொலைநோக்கு கருவி வழியாகப் பார்ப்பதைப் போல், அந்த வார்த்தையின் வழியாகத் தெய்வீக குணாம்சத்தின் அழகையும் தெய்வீக திட்டத்தின் மாட்சிமையையும் கண்டு பூரிப்படைவோமாக. தேவ வார்த்தை மற்றும் திட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்படும் காரியங்களின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் எந்த மனுஷனாலும் அளவிடப்படக் கூடாதவைகளாக இருக்கின்றன. பிரதிஷ்டை செய்தவர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியின் மூலம் அவைகளைப் புரிந்து கொள்ளக்

கூடும். மேலும் எந்தளவிற்கு அவர்கள் சுபாவ மனுஷனின் பரிசுத்தமற்ற சிந்தனைகளையும், உணர்வுகளையும் அகற்றி, அவைகளிடத்தில் பரிசுத்த ஆவியை(பரிசுத்த மனதையும், பரிசுத்த சிந்தனைகளையும்) ஏற்றுக் கொள் கிறார்களோ, அந்தளவிற்கு அதிகமாக அவர்கள் தெய்வீக குணாம்சத்தின் மற்றும் திட்டத்தின் காரியங்களைப் புரிந்து கொள்வார்கள் (எபே. 3:18).

*25.* அப்போஸ்தலர் நம்முடைய பாட வசனத் தைப் பிரதிஷ்டை செய்தவர்களிடம் சொல்லுகிறார். அந்த வகுப்பைச் சேர்ந்த அனைவரும் கர்த்தருடைய வார்த் தையை மதித்துணர்ந்து படிக்க வேண்டுமென்பதற்குக் கர்த்தர் என்னே அதிக முக்கியத்துவத்தைக் கொடுக் கிறார். அதன் மூலம் மனதை ஆண்டு கொள்வதே வெற்றியாகும். இவ்வாறு சுயத்தை ஆண்டு கொள்வதே வெற்றியாகும். நாம் அடையக் கூடிய வெற்றிகளில் மிக பெரிய வெற்றியாகும். வேத வசனங்கள் அறிவிப்பது போல், "பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்" (நீதி. 16:32). பிரதிஷ்டை செய்தவர்களின் மனரீதியான ஆரோக்கியத் திற்காக அப்போஸ்தலர் இவ்வசனத்தில் கொடுக்கிற மருந்தானது, நம்முடைய குணாம்ச அபிவிருத்திக்கு மிகவும் அவசியமான "ஆத்தும பயிற்சி" ஆகும். இந்த மருந்தை உபயோகிப்பதின் மூலம் மட்டுமே நாம் நம் முடைய கர்த்தராகிய யெஷுஆவின் மூலம் தேவனுக்குப் பிரியமான, ஏற்புடைய குணாம்சத்தை அபிவிருத்தி செய்து கொள்ளக் கூடும். இவ்வாறு செய்கிறவர்கள் மட்டுமே ராஜ்யத்தில் பங்கு பெறுகிற "ஜெயங் கொள் பவர்களாக" இருப்பார்கள்.

*26.* ஆகையால் அப்போஸ்தலர் அறிவுறுத்து வதைப் போல், "பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவா சத்தைத் துவக்குகிற ... யெஷுஆவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடு வோமாக". அவர் நம்முடைய விசுவாசத்தை முடிக்கிற வராக ஆகும் வரை விடாமுயற்சியோடு ஓடுவோமாக (எபி. 12:1,2). நாம் நம்மை ஒப்புக்கொடுக்கும்போது, நம் பட்சத்திலிருக்கவும், நமக்குச் சகாயஞ் செய்யவும், ஒவ் வொரு கஷ்டத்தின் வழியாக நம்மைத் தாங்கிச் செல்ல வும், நமக்கு முழுமையாகப் போதிக்கவும், நம்முடைய சுதந்தரத்தை அடைய நம்மைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கவும் யெஷுஆ முன்வருகிறார். அவரே நம்மில் அன்பு கூர்ந்து, அவருடைய விலையேறப்பெற்ற சொந்த ரத்தத்தினால் நம்மைக் கிரயத்திற்குக் கொண்டார் என் பதை எப்பொழுதுமே நினைவுக்கூருவோமாக!

*27.* ஆகையால் வேதாகமம் பொதுவாக மனதை யும் இருதயத்தையும் சித்தத்தையும் காத்துக் கொள்வதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. "எல்லாக் காவ லோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத் தினின்று ஜீவஊற்று புறப்படும்" (நீதி 4:23). ஆகையால் இருதயத்தைக் காத்துக் கொள்வதென்பது, இக்காலத்தில் பிரதிஷ்டை செய்து ஓடிக்கொண்டிருப்பவர்களுக்கு ராஜ் யத்தில் நித்தியஜீவனை அர்த்தப்படுத்தும். அதைக் காத்துக் கொள்ளத் தவறுவது, அதாவது சுய கட்டுப் பாட்டை அப்பியாசிக்க மறுப்பதென்பது, நம்முடைய மூளையில் சுயநல ஆசைகள் நுழைய இடங் கொடுப்பதை அர்த்தப்படுத்தும். இது நம்மைக் கர்த்தரிடமிருந்தும் அவருடைய நெருக்கமான பாதையிலிருந்தும் தூரமாகக் கொண்டு போகும். ஆகையால் நாம் நம்முடைய மன திலும் இருதயத்திலும் தேவ வார்த்தையின் சிந்தனை களை உறுதியாகப் பற்றிக் கொள்வோமாக.

★★★★★★★★★★★★★★★★★★★★★

# பூமியைக் கவிழ்ப்பது

*ஏசா. 24:1-ம் வசனத்தில் கர்த்தர் தேசத்தைக் (பூமி யை) கவிழ்ப்பார் என்பது எதை அர்த்தப்படுத்து கிறது? (BSQB, p. 146-148)*

*1.* சிங்கங்கள், கரடிகள், சிறுத்தைகள், செம்மறி யாடுகள், வெள்ளாடுகள், மரங்கள், நதிகள், சமுத்திரம், காற்று, இடி, மின்னல், கல்மழை, மழை, உஷ்ணம், குளிர், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலியவைகள் வேதாகமத்தில் உருவகங்களாக உபயோகிக்கப்பட்ட தைப் போல், பூமி என்பதும் ஒரு உருவகமாக உபயோ கிக்கப்படுகிறது.

*2.* ஒரு உருவகமாகப் பூமி என்பது சமுதாய அமைப்பை, அதாவது ஒழுங்கமைக்கப்பட்ட மானிட சமுதாயத்தைக் குறிக்கிறது. பின்வரும் வேத வசனங் களிலிருந்து நாம் அதை எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடும்: "இன்று என்னை இந்த தேசத்திலிருந்து (பூமி யிலிருந்து - சமுதாயத்திலிருந்து) துரத்தி விடுகிறீர்" (ஆதி. 4:14). "பூமியெங்கும் (மானிட சமுதாயம்) ஒரே பாஷையும், ஒரே விதமான பேச்சும் இருந்தது" (ஆதி. 11:1). "பூமியின் நடுவில் நானே கர்த்தர்..." (யாத் 8:22). "வானங்களே (உயர்வான, மதரீதியான, ஆளும் வல்லமைகள்), கேளுங் கள்; பூமியே (நிச்சயமாக இது சொல்லர்த்தமான பூமியைக் குறிக்காது) செவி கொடு" (ஏசா. 1:2). "பூமியின் எல்லை யெங்குமுள்ளவர்களே (KJV – ends of the earth – பூமியின் எல்லைகளே), என்னை நோக்கிப்பாருங்கள்; அப் பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை" (ஏசா. 45:22). "பூமியே களி கூரு" (ஏசா.49:13).

*3.* "<u>நீங்கள்</u> (கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள்) <u>பூமிக்கு</u> (சமுதாய அமைப்புக்கு) <u>உப்பாயிருக்கிறீர்கள்</u> (அதை பண்படுத்தி, சுத்திகரித்து, குணமாக்கி, பாது காக்கும் ஒன்று –மத். 5:13)." வெளி. 7:1,2 வசனங்களில் "<u>பூமியின்</u> (ஒழுங்கமைக்கப்பட்ட மானிட சமுதாயம்) <u>நான்கு திசைகளிலும்</u> (KJV பார்க்கவும், கோணங்கள் - சொல்லர்த்தமான பூமிக்கு நான்கு கோணங்கள் இருப் பதில்லை - இது அரசாங்கம், மேல்தட்டு மக்களின் அமைப்பு, முதலாளிகளின் அமைப்பு மற்றும் தொழிலாளி வர்க்கம் என்பவைகளைக் குறிக்கிறது) <u>நான்கு தூதர்கள்,</u> (தேவனுடைய கோபாக்கினையின் தூதர்கள், அதாவது உபத்திரவத்தை உண்டு பண்ணுகிற சில பிரபுக்கள், மேல் தட்டு மக்கள், முதலாளிகளாக இருக்கிற வியாபாரிகள் மற்றும் விவசாயிகள், தொழிலாளிகள் -இவர்கள் உபத் திரவ காலத்தின் கோபாக்கினையின் பாடுகளை ஊற்று கிறார்கள்) <u>நின்று</u> (ஒவ்வொரு வகுப்பும், அதற்குரிய சமுதாய அமைப்பின் பிரிவில் நின்று கொண்டு), <u>பூமியின்</u> (ஒழுங்கமைக்கப்பட்ட சமுதாயம்) <u>மேலாவது, சமுத் திரத்தின்</u> (கலகம் செய்கிற, அமைதியற்ற, சட்டத்திற்குக் கட்டுப்படாத மக்கள்)<u>மேலாவது ,...அடியாத படிக்கு</u>..." என்று நாம் வாசிக்கிறோம்.

*4.* இந்த உருவகமான பூமி, அதாவது ஒழுங் கமைக்கப்பட்ட மானிட சமுதாயம் சம்பந்தமாகத், தேவ வார்த்தை நமக்குப் பின்வரும் காரியத்தைக் காண் பிக்கிறது: இப்பொழுதிருக்கிற இந்த அமைப்பானது வெறித்தவனைப் போல் தள்ளாடி, குலுங்கி அசைந்து, வெந்து அழிந்து, எரிந்து உருகி போய், ஒரு குடிலைப் போல் பெயர்த்துப் போடப்பட்டு அகன்று போம் (சங். 46:2; 75:3-10; ஏசா. 24:1-4, 17-20; ஆகாய். 2:6, 7; எபி. 12:26,27; வெளி. 20:11; 21:1). ஏசா. 24:1-ல் நாம் வாசிக்

கிறதாவது, "இதோ கர்த்தர் பூமியை வெறுமையும் (இந்த உபத்திரவ காலத்தில் தேவன் மானிட சமுதாயத்திலிருந்து அதின் புத்தியீனமான ஆலோசனைகளையும், சுயநலமான ஏற்பாடுகளையும் அகற்றி அதை வெறுமையாக்குகிறார்; அதின் குடிமக்களில் அநேகர் மரித்திருந்தாலும், வருங் காலத்தில் மரிக்கப் போவதாக இருந்தாலும், தேவன் சொல்லர்த்தமாகப் பூமியில் குடிகளே இல்லாதபடி அதை வெறுமையாக்குவார் என்று நாம் புரிந்து கொள்ளக் கூடாது. ஏனென்றால் இவ்வசனத்தின் சூழ்நிலை அமைப் பும், யெஷுஆ சொன்ன தீர்க்கதரிசனமும் இதைக் காண்பிக்கின்றன. இக்காலத்தின் மகா உபத்திரவத்தில் சிலர் தப்பித்துக் கொள்வார்களென்று யெஷுஆ கூறு கிறார்; அவர்களின் எண்ணிக்கை சிறிதாக இருந்தாலும், நிச்சயமாகச் சிலர் விட்டுவிடப்படுவார்கள் – ஏசா. 24:6; மத் 24:21.22) பாழுமாக்கி (சங்காரமென்னும் துடைப் பத்தினால் – ஏசா. 14:23 - சாத்தானுடைய காரியங்களின் அமைப்பைத் தேவன் பெருக்கி விடுகிறார்), அதைக் கவிழ்த்து (முழு உலகமும் புரட்டப்பட்டு, ஒழுங்கின்மை ஆக்கப்பட்டு, பெரிதும் தாறுமாறாக ஆக்கப்பட்டு, தலை கீழாக்கப்பட்டு, குழப்பத்தினால் அதின் ஞானமெல்லாம் மூழ்க்கப்பட்ட நிலையை அடைகிறது. மேல்தட்டு வர்க் கங்களும் அதின் காரியங்களும் தாழ்த்தப்பட்டு, கீழ்தட்டு வர்க்கங்கள் உயர்த்தப்படுகின்றன), அதின் குடிகளைச் சிதறடிப்பார் (எண்ணற்ற வீடுகள் முற்றிலும் அழிக்கப் பட்டு, எத்தனையோ ஜீவிய காலங்களின் உழைப்பு இடிந்த கூலமாக்கப்பட்டு, கோடிக்கணக்கான குடும் பங்கள் பிரிக்கப்பட்டு சிதறடிக்கப்படுகின்றன - முடிவு இன்னும் வரவில்லை)".

5. அர்மகெதோன் யுத்தம் (P. Vol. 4) மற்றும் மில்லினியம் (E. Vol.17) என்ற புத்தகங்களில், சாத்தா னுடைய தற்கால காரியங்களின் அமைப்பு முற்றிலும் கவிழ்க்கப்பட்டு "நீதி வாசமாயிருக்கும் புதிய வானங் களும் புதிய பூமியும்"(2பேது. 3:13) வருங்காலத்தில் ஸ்தாபிக்கப்படுவதைப் பற்றிய விவரமான ஆய்வுகளும், வேதாகம நிரூபணங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. "ஜாதிகளே, கேட்கிறதற்குக் கிட்டி வாருங்கள் … பூமியும் அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதில் உற்பத்தியான யாவும் (தீமையான மற்றும் சுயநலமான யாவும்) கேட்கக் கடவது. சகல ஜாதிகளின் மேலும் கர்த்தருடைய கடுங்கோபமும், அவைகளுடைய சகல சேனைகளின் மேலும் அவருடைய உக்கிரமும் மூளுகிறது. அவர்களைச் சங்காரத்திற்கு நியமித்து, கொலைக்கு ஒப்புக் கொடுக் கிறார் … அது கர்த்தர் பழிவாங்கும் நாள்" (ஏசா. 34:1,2,8).

6. வருங்கால காரியங்களின் கண்ணோட்டத் திலிருந்து கர்த்தர் பின்வரும் காரியங்களையும் எழுதி வைத்திருப்பதற்காகத் தேவனை ஸ்தோத்தரிப்போம்: "பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை வந்து பாருங்கள். அவர் பூமியின் கடை முனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்; வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார்; இரதங்களை நெருப் பினால் சுட்டெரிக்கிறார். நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்" (சங். 46:8-10; ஏசா . 2:2-4; 9:6, 7 வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வும்).

7. இந்த நோக்கத்திற்காகவே பாவம், சுயநலம் மற்றும் தப்பறை நிறைந்திருக்கிற சாத்தானுடைய சாம் ராஜ்யத்தை தேவன் அழித்து பூமியைக் கவிழ்த்துப் போடு கிறார். "பள்ளமெல்லாம் (மனத்தாழ்மையும் பணிவு நயமுள்ளவர்கள்) உயர்த்தப்பட்டு, சகல மலையும் (ராஜ் யம்) குன்றும் (சிறிய ஏகாதிபத்திய அரசாங்கம்) தாழ்த்தப் பட்டு (சமுதாயத்தின் நிலைமைகள் சமமாக்கப்படும்), கோணலானது (முறை கேடானது) செவ்வையாக்கி, கரடு முரடானவைகள் (தப்பறைகள், முரண்பாடுகள், பொய் யான கோட்பாடுகள் - இடறுதலுக்கான கற்கள்) சமமாக் கப்படும் என்றும், கர்த்தரின் மகிமை (அவர் அளிக்கும் ஆசீர்வாதங்களிலும் இரட்சிப்பிலும் வெளிப்படுகிற அவருடைய பரிசுத்த குணாம்சத்தின் மாட்சிமை) வெளி யரங்கமாகும் (வரவிருக்கும் சமாதானத்தின் ஆட்சியில்), மாம்சமான யாவும்( முழு மனுகுலமும்) அதை ஏகமாய் காணும் (ஏசா. 40:4,5).

★★★★★★★★★★★★★★★★★★★★★

**காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே.**

பிர. 12:13



***உங்கள் கவனத்திற்கு***

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது

**புது உடன்படிக்கை**

*Monthly newsletter published by the brethren of the Millennial Bible Truth Movement*